REGD M. 4642.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணு

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 5–6–49 | இதழ் 49

★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—7

எஸ். வி. லிங்கம்

தேர்தலில் சண்முகம் அவர்களும், ஆற்காடு இராமசாமி அவர்களும் தோல்வியடைந்ததைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட 'ஐயர் பத்திரிகைகள்' எல்லாம், அளவற்ற மகிழ்ச்சியில் ஆடிக் குதித்தன. ஜஸ்டிஸ் கட்சி என்ருலே பிடிக்காத பார்ப்பனரல்லாதாருக்குக்கூட, இருவரின் தோல்வியினுல் ஜஸ்டிஸ்கட்சி மீது அனுதாபம் உண்டாகிய காலம்.

கட்சிக் கூட்டத்தைக் கூட்டிச் செட்டிநாட்டிராசா குடும்பத்துக்குத் துரோகப்பட்டத்தை வெளிப்படையாகவே சூட்டவேண்டுமென்பது கட்சியிலுள்ளவர்களின் ஆர்வம். இதைப் பெரியாரும் ஆதரித்தார். இக்காலத்தில்தான் அழகர்சாமியும் நானும், டி. வி. சுப்பிரமணியம் அவர்களால் அடையாறு மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

இரண்டு மூன்று நாட்களாகச் செய்யப்பட்ட ஆலோசனைக்குப் பின்னர், செட்டிநாட்டரசரை மறைமுகமாக ஆதரிப்பதென்றும், சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் குமாரராசாவை ஆதரிக்கும் கட்சியொன்றை உண்டாக்குவதென்றும், கட்சிக்குள் ஓர் கட்சியை உண்டாக்குவதைப் போலவே, சட்டசபையிலும் குமாரராசாவை ஆதரிக்கும் கட்சியொன்றை உண்டாக்குவதென்றும், இன்னும் இதுபோன்ற பல திட்டங்களை நாங்கள் சொன்னேம். எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள்.

எங்களிடம் செட்டிநாட்டாருக்கு நம்பிக்கை உண்டாக எங்களுடைய வீரதீரத்தைக் காட்ட ஓர் சந்தர்ப்பத்தை நாங்கள் உண்டாக்கவேண்டுமென்பதும், அது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்பதும் நாங்கள் எதிர்பார்த்துச் செய்யப்பட்டவையாகும். அழகர்சாமி, குமாரராசாவிடம் முன்கூட்டித் தோராயமாகச் சொன்னவைகள் எல்லாம் ஒவ்வொன்ருக நடைமுறைக்கு வர ஆரம்பித்தன.

பெரியார், 'குடி அரசு'ப்பத்திரிகையில் செட்டிநாட்டரசரைச் சாடையாகத் திட்டி, "அங்கு மஞ்சள் துணியில் கட்டிப் போட்டிருக்கும் பணமூட்டைகளைச் சுற்றி, நமது கட்சித் தொண்டர்களிற் சிலர் திரிந்து கொண்டிருப்பது எனக்குத்தெரியும். இவர்களை ஒருகை பார்க்கிறேன்" என்று பொருள்படுவதுபோலத் தொடக்கத்திலேயே காரசாரமாக எழுத ஆரம்பித்துவிட்டார். இது எங்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்தது. இவற்றையெல்லாம் அப்பொழுது ஹோம் மெம்பராக இருந்த பன்னீர்ச்செல்வம் அவர்களிடம் சொன்னேம். "நாங்கள் செட்டிநாட்டாருடன் இருக்கிறேம்—அதற்குக் காரணம் இன்னின்னவை—இதனுல் ஏற்படும் இலாபநட்டத்தை நாங்கள் ஏற்கத்தயார்" என்றும் சொல்லிவந்தோம்.

அழகர்சாமியிடம் இருந்த ஒரு தனிப்பட்ட விசேஷம் என்னவென்ருல், தன்னைவிட எல்லாவகையிலும் பெரிதான ஒன்றையோ ஒருவரையோ எதிர்த்துப் போராடுவதில் ஓர் ஆர்வம். இவ்விதமாகப் பெரியார் பொப்லி உட்படச் சேர்ந்து சண்டையிடும் ஓர் கட்சியில் எதிர்த்து நின்று, அதாவது தனது பெயர் வெளிவராமல் போராடிப் பார்ப்பதில் ஓர் மகிழ்ச்சி. இந்த விஷப்பரீட்சையில் தான் இறங்கும் போது, தன்னுடைய பாதுகாப்புக்கு ஓர் இடம் இருக்கவேண்டுமே என்பதற்காக, அதாவது, எங்கு திருடினுலும் கன்னக்கோல் சாத்த ஓர் இடம் வேண்டுமென்பதுபோல், பன்னீர்ச்செல்வத்திடம் மட்டும் தன்னு

டைய நிலைமை முழுவதையும் சொல்லி இருந்தார்.

நிலைமை இவ்வாறிருக்க, செட்டி நாட்டுக் குமாரராசாவைக் கண்டிப்பதற்காகச், சென்னையில், பாத்ரோ அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடத்த ஜஸ்டிஸ்கட்சி ஏற்பாடு செய்திருந்தது. இதைக் கேள்விப்பட்டதும் குமாரராசா பெருங் கவலைக்குள்ளானார். நிரபராதியான தன்மீது ஜஸ்டிஸ் கட்சியார் அபாண்டமாகக் குற்றஞ்சாட்டுகிறார்களே! இது தர்மமா? என்பதே அவருக்கிருந்த கவலையாகும். இப்படி அவர் கவலைப்படுவதைப்பார்த்த அழகர்சாமி, "பயப்படாதீர்கள்! கண்டனக் கூட்டம் நாளை நடைபெறாது. அது போதுமா" என்று கேட்டார். கோடீஸ்வரரான குமாரராசாவுக்கு இப்படி அழகர்சாமி சொன்னதும் ஓர் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால் 'முடியுமா' என்பதில் கவலை. முன்னேற்பாட்டின்படியே மறுநாள் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. அழகர்சாமி கே. எம். பாலசுப்பிரமணியத்தையும் அழைத்துக்கொண்டு - அந்தக் கண்டனக் கூட்டத்துக்குச் சென்றார். சுப்பிரமணியத்துக்குப், பாத்ரோஎன்றாலே துளியும் பிடிக்காது. அழகர்சாமி சுப்பிரமணியத்தைப் பார்த்து "பாத்ரோ யோக்யன்—குமாரராசா அயோக்யன் என்று எப்படிச்சொல்ல முடியும் குமரன்!" (குமரன் என்பது செல்லப்பெயர்) என்று கேட்டார். "தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகருக்கு எதிராகப் பாத்ரோ வேலை செய்தாரே! அந்தச் செய்தி பத்திரிகைளில் வெளிவந்திருக்கிறதே! இப்படிப்பட்டவர் குமாரராசாவைக் கண்டிக்கிறாராமே!" என்றார். உடனே பாலசுப்பிரமணியம் சிங்கம் போல் மேடைமீது பாய்ந்து, "ஒரு துரோகியை இன்னொரு துரோகி கண்டிப்பதை நான் அனுமதிக்க மாட்டேன்; பாத்ரோ அவர்கள் இன்னின்ன ஊர்களில் ஜஸ்டிஸ்கட்சி அபேட்சகருக்கு எதிராகப் பேசியிருக்கிறார்; இன்னின்ன தேதி 'இந்து'பத்திரிகையில் அந்தச்செய்திகள் வெளிவந்திருக்கின்றன" என்று பாத்ரோவைச் சாங்கோபாங்கமாகக் கண்டிக்கத் தொடங்கினார். அந்தச் சமயத்தில் பாலசுப்பிரமணியத்துக்குச் சென்னையில் நல்ல பெயர். இப்படி அவர் கண்டித்துப் பேசிக்கொண்டிருக்கும் போதே பாத்ரோ கூட்டத்தை விட்டுப் போய்விட்டார். அடையாற்றாரைக் கண்டிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் கண்டனத்துக்கு இடம் கொடுக்காமலேயே கலைக்கப்பட்டது. பாலசுப்பிரமணியத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு நாங்கள் இருவரும் டி. வி. சுப்பிரமணியம் அவர்களோடு அடையாறுக்குச் சென்றோம். அன்று நாங்கள் அடைந்த வெற்றிக்காக மகிழ்ச்சி அடைந்தது அடையாறு ஒன்றுதான்.

பின்னர், அழகர்சாமி, "ஜஸ்டிஸ் ஆங்கிலத் தினசரியில் குமாரராசா கண்டிக்கப் படுவார்" என்று சொன்னார். அவ்விதமே கண்டிக்கப்பட்டார்.

இதற்குள், எல்லாச் சட்டசபை உறுப்பினர்களையும் விலைபேச ஆரம்பித்துவிட்டோம். அவரவர்களுக்கு வேண்டிய, எல்லா வசதிகளையும் செய்தோம். பெரும்பாலும் எல்லா வகைச் செலவுக்கும் டி. வி. சுப்பிரமணியமே பணம் கொடுப்பார். இதை அடையாற்றார் தான் கொடுக்கிறார் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

அந்தக்காலத்தில், சிந்தாதிரிப் பேட்டையில், டாக்டர் வரதராஜுலு மேற்பார்வையில், "இந்தியா ஓட்டல்" என்ற பெயரோடு ஒரு உணவு விடுதி நடைபெற்று வந்தது. பெரும்பாலும் காஸ்மாபாலிட்டன் கிளப்பில் தங்காத சட்டசபை உறுப்பினர்கள் இந்த ஓட்டலில்தான் தங்குவார்கள். இங்கே, கோவை சி. எஸ். இரத்னசாமி அவர்கள் தலைமையிலுள்ள சட்டசபை உறுப்பினர்களின் கட்சி இருந்துவந்தது. சென்னைக்கு வந்தால் இங்கேதான் அவர்கள் தங்குவார்கள். இக்கட்சி உறுப்பினர்களைக் கண்டு பேசித் தங்கள் கட்சிக்கு இழுக்கும் வேலையில் அழகர்சாமியும், சுப்பிரமணியமும் ஈடுபட்டார்கள். இவர்கள், முதலில் அவர்களைக் கண்டுபேசி, நட்புக்கொண்டு, அடுத்த தேர்தல் வந்தால் அதற்காகப் பயப்படவேண்டாம் என்று தைரியம்கூறி, அதற்காக ஏற்படும் செலவுக்கு இப்போதே பணம் கொடுப்பது என்றும் பேசிக் கட்சி சேர்த்தார்கள். இன்று சென்னையில் பிரபல கனவானாகவுள்ள நண்பர் நம்பியார் அவர்கள், அக்காலத்தில் இரத்ன சபாபதி அவர்களின் சட்டசபைக் கட்சியின் கொரடாவாகவும் முக்கியஸ்தராகவும் இருந்தார். முதல் முதல் அழகர்சாமியால் ஏற்படுத்தப்பட்ட கூட்டத்தின் விளைவு இவரை அடையாற்றுக்குஅழைத்துவந்தது. அன்று தொடக்கப்பட்ட நட்பு அடையாற்றாருக்கும் நம்பியாருக்கும் இன்றுவரை கலையவில்லை.

இம்மாகாணம் முழுவதும் உள்ள சட்டசபை உறுப்பினர்களிடமும் அழகர்சாமியின் பட்டாளம் சென்று வியாபாரம் பேசும். அதாவது, "அடையார் கட்சிக்கு வருகிறீர்களா? செலவு என்ன ஆகும்?" என்பதுதான் அந்த வியாபாரம்! இதில் இன்ன கட்சி என்பது ஒன்றும் பார்ப்பது கிடையாது. அவ்வளவு நெஞ்சழுத்தம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நட்புக்காகவும் பணத்துக்காகவும் எல்லாச் சட்டசபை உறுப்பினர்களும் விலை பேசப்பட்டார்கள். பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. திருநெல்வேலி தளவாய் குமாரசாமி அவர்களிலிருந்து முனிசாமிகள், ஜெகன்னாதங்கள் வரை பேசி முடித்து, அடையாற்றுப் படை வரிசையைப் பலப்படுத்தினார்கள். பொப்லி மேலுள்ள கோபத்தால் பட்டுக்கோட்டை நாடிமுத்து அவர்கள் போன்றோரும் மறைமுகமாக அடையாற்றாரையே ஆதரித்தார்கள். இவ்விதம், அடையாற்றார் கை மேலேயும், பொப்லியின் கை கீழேயுமாக நிலைமை மாறிவரும் சமயத்தில், ஜஸ்டிஸ் கட்சியினர் பொது நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அதில், குமாரராசாமீது கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது என்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தது. இதற்கு என்ன செய்வதென்று டி. வி. சுப்பிரமணியம் அழகர்சாமியுடன் யோசித்தார். சதியாலோசனையில் யாவும் முடிவு செய்யப்பட்டன.

இக்காலத்தில்தான் நண்பர் பொன்னம்பலனார் பெரியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரானார்.

பத்து, ஐந்து ரூபா நோட்டுக்களாக ஏழெட்டாயிரம் ரூபாய்க்குப் புது நோட்டுகள் கொண்டுவரப்பட்டன. தெலுங்கு நாட்டு வேலை வேறொருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ் நாட்டு வேலையை டி. வி. சுப்பிரமணியம் ஏற்றுக்கொண்

டார். எல்லா ஊர்களுக்கும், அந்தந்த ஊருக்கும் ஆளுக்கும் ஏற்ற முறையில்—குமாரராசாவைக் கண்டிக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளும் தந்திகள் தயாரிக்கப்பட்டன. தந்திகளோடு, ஆட்களின் தகுதிக்கு ஏற்றபடி கரன்சி நோட்டுகளும் பின்தொடர்ந்தன. இந்த ஏற்பாடுகள் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கூட்டம் கூடுவதற்கு முன் தினமே செய்யப்பட்டு விட்டன. இந்தச் சமயத்தில் அழகர்சாமி உடல் நலமில்லாத காரணத்தால் பட்டுக்கோட்டைக்குப் போய்விட்டார். போகும்போது டி. வி. சுப்பிரமணியத்தைக் கண்டு, ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்களைக் குமாரராசாவே நேரில் போய்ப்பார்க்கும்படி சொல்லிவிட்டுப் போனார். இந்த நாடகத்தை ஒழுங்காக நடித்துக்காட்டிய பெருமை சுப்பிரமணியத்தையே சாரும். இதில் வேடிக்கை என்னவென்றால், சுப்பிரமணியமும் அழகர்சாமியும் தனித் தனியாக இராசா அண்ணாமலைச் செட்டியாரைச் சந்தித்துப் பேசி, பெரியாரை இராசா அண்ணாமலைச் செட்டியாரே சந்தித்துப் பேசிக் கேட்டுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டதுதான்.

அப்பொழுதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தைக் கண்டாலே பெரியாருக்குப் பிடிக்காத காலம். இன்று கட்சி என்றால், பெரியார் கைக்குள் அடங்கியிருப்பதுபோல் அன்று நமக்குக் கட்சி மெம்பர்களிடம் தொடர்பில்லை.

கண்டனக் கூட்டத்துக்கு முதல் நாள், விருதுநகர்க் கூட்டத்துக்காகப் பெரியார் ஈரோட்டிலிருந்து திருச்சி வழியாகச் சென்றார். இராசா அண்ணாமலைச் செட்டியாரும் சென்னையில் இருந்து செட்டிநாட்டுக்குப் போவதற்காகத் திருச்சி வழியாக அதே நாளில் புறப்பட்டார். இருவரும் எதிர்பாராதவிதமாகத் திருச்சியில் சந்தித்துப் பேசிக்கொண்டார்கள். குமாரராசாவை விட அவருடைய தந்தையாரிடம் மற்றவர்களைப் போலவே பெரியாருக்கும் மதிப்பு உண்டு. பனகால் இராசா காலத்திலிருந்தே இந்த நட்பு இருந்துவந்தது. இந்தச் சந்திப்பிற்காக இரு கட்சித் தலைவர்களும் தங்கள் யுத்த முறைகளில் எதையும் மாற்றிக் கொள்ளவில்லை.

மறுநாள், தமிழ் நாட்டில் தந்தி ஆபீஸ் இருக்கும் ஊர்கள் எல்லாவற்றிலிருந்தும் அடையாற்றாரை ஆதரித்துப் பொப்பிலிக்குத் தந்திகள் வந்தன. இதைக் கண்டு பொப்பிலி அரசரும் அவருடைய சகாக்களும் கலங்கிப் போனார்கள். ஆனால் பன்னீர்செல்வம் இவர்களுடன் இதைப் பற்றிப் பேசினாரே தவிர, இதற்காக அவர் ஒன்றும் ஆச்சரியப்படவில்லை. ஈரோட்டிலிருந்து மட்டும் தந்தி வரவில்லை. ஈரோட்டிலிருந்து தந்தி வராமல் இருக்கும் ஏற்பாட்டை அழகர்சாமிதான் செய்தார். இந்த தமாஷில், பெரியார் இருக்கும் ஊரில் இருந்து தந்தி வரப்படாதென்பது அழகர்சாமியின் கருத்து. இன்னும் ஜஸ்டிஸ் கட்சியின் பயிலை (File)ப் பார்த்தால் இது நன்றாக விளங்கும்.

இதன் பின்னர், பெரியாரும் சண்முகம் அவர்களும் சென்னையில் பொப்பிலியை ஆதரித்து வேலை செய்தார்கள். தளவாய் முதலியார் போன்ற அடையாற்றுப் படைவரிசைகள் பொப்பிலி படையாக மாற்றப்பட்டன. இந்தச் சண்டை மும்முரமாக இருந்த காலத்தில் இராசா அண்ணாமலைச் செட்டியார் மேல்நாட்டுக்குச் சென்றிருந்தார். இதனால்தான் அன்று குமாரராசா படை தோற்றது. இப்படிப்பட்ட பெரிய சண்டையில், ஒரு கட்சியின் முக்கிய தலைமைப் பதவியில் வேலை செய்தும் அவர் கட்சித் துரோகியாக என்றும் நடந்ததில்லை — நடந்தார் என்றும் யாரும் சொன்னதுமில்லை—நடந்ததாகச் சொல்லக்கூடிய நிலையில் மற்றவர்கள் இருக்காதபடி அவர் செய்திருந்தார்.

(தொடரும்)

சுவாமிகளின் திருவிளையாடல்

15-ம் பக்கத் தொடர்ச்சி

கள் ஆத்திரத்தோடு 'அக்னிபகவானுக்கு அர்ப்பணமாக்கும் அரும் பணியை அருமையாகச் செய்து முடித்திருக்கிறார்.

தீட்டிய கல்லில் கூர் பார்ப்பது போல், யார், அன்பர் சகஜானந்தம் அவர்களின் இனமுன்னேற்றத்துக்காகப் பாடுபடுகிறார்களோ, அவர்கள் மீதே பாய்கிறார் அன்பர் சகஜானந்தம். அவருடைய பாய்ச்சலின் வேகம் திராவிடர் கழகத்தாரின் பொறுமையைச் சோதிப்பதுபோல் காணப்பட்டாலும், திராவிடர் கழகம் தன்னுடைய பொறுமையை இழந்து, நாட்டுமக்களின் இழிவைப் போக்கி அனைவரையும் சமநிலைக்குக் கொண்டுவரும் சிறந்த பணியினின்றும் ஒருபோதும் விலகாது என்பதையும், தாழ்த்தப்பட்ட சகஜானந்தங்கள் சம ஆனந்தங்களாகும் வரையில் போராடி வெற்றிபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, யானை தன் கையாலேயே மண்ணை அள்ளித் தன் முதுகில் போட்டுக்கொள்வதுபோன்ற செயலை சுவாமி சகஜானந்தம் போன்றவர்கள் தங்களுடைய திருவிளையாடலாகக் கருதலாம். அண்மையில், அருணையம்பதியில் அன்பர் ஆச்சாரியார் கூறினாரே, சுயமரியாதை இயக்கமும் ஆண்டவனுடைய லீலைகளில் ஒன்று என்று, அதுபோன்று, ஒரு கட்சியின் கொடியை அகற்றுவதையும் அதனைத் தீக்கிரையாக்குவதையும் சுவாமிகள் திருவிளையாடலின்பாற்பட்ட லீலைகளில் ஒன்றாகக் கருதிச் செய்திருந்தால், நன்றாகச் செய்யட்டும்! அதனால் ஏற்படும் லாபநட்டத்தையும் ஏற்கத் தயாராக இருக்கட்டும்! ஆனால், திராவிடர் கழகம் இத்தகைய லாபநட்டக் கணக்கைப் பார்க்கும் நிலைமையை உண்டாக்கி, ஒருவருக்கொருவர் வீணான பூசல்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதென்ற நோக்கத்துடனேயே தன் வேலையைச் செய்து வருகிறதென்பதை மட்டும் இத்தகைய 'லீலைப்பிரியர்கள்' உணர வேண்டுகிறோம்.

●

"தமிழரசி வாசகசாலை"

—✱—

குறிஞ்சிப்பாடியில் நாளது 12—6—49 ஞாயிறு மாலை 5-மணியளவில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் சி. என். அண்ணாத்துரை அவர்களால் திறந்து வைக்கப்படும். தோழர்கள், சி. பி. சிற்றரசு, ஈ. வி. கே. சம்பத், இரெ. இளம்வழுதி ஆகியோரும் கலந்துகொள்வர்.

அனைவரும் வருக!

‘சுவாமிகளின்’ திருவிளையாடல்!

“ஊ...ஹூ....ம் வரமாட்டேன். எனக்குப் பயமாயிருக்கம்மா........ அங்கே வரமாட்டேன்.”

“ஏண்டா, கண்ணு! என்னடா; உனக்குப் பயம்?”

“ஊ........ஹூ.....ம் வரமாட்டேன்.”

“என் கண்ணல்ல.......ஓரேபிடி சாப்பிட்டுவந்துடலாண்டா கண்ணு”

“வரமாட்டேன்........அங்கே வந்தா அப்பா அடிக்கும்.”

“ஏண்டா, அப்பா அடிக்கிறாங்க. நான் அப்பா அடிக்காமல் பாத்துக்கிறேன், வாடா என் கற்கண்டு!”

“நான் வரமாட்டேன் அதோ பார் அம்மா, பிரம்பு!”

“பிரம்பு ஒண்ணும் செய்யாதுடா......நான் பாத்துக்கிறேன், வா”

“ஊ.....ஹூ...ம் நீ பிரம்பைத் தூக்கி வெளியே எறிஞ்சாத்தான் வருவேன்.”

“தூக்கி எறிஞ்சுப்பிடுகிறேன், வா......வெள்ளிக் கிண்ணத்திலே, சோறு வைச்சிருக்கேன், வந்துபாரு........உனக்காக எவ்வளவுகஷ்டப் படுகிறேன்,வாடா, என்செல்லமல்ல!”

“நீ போயி அதைத்தூர எறிஞ்சுப்புட்டுவந்தாத்தான், வருவேன்.”

மகனுக்கு அச்சமூட்டிக்கொண்டிருந்த பிரம்பை, தாய் அப்புறப் படுத்திவிட்டுவந்து,

“எறிஞ்சுப்பிட்டேன். இப்ப வா, வந்து சாப்பிடு.”

“இனிமே, பிரம்பைஅங்கேவைக்க மாட்டேன்னு சொல்லு........அப்பத்தான், வருவேன்.”

“இனிமே வைக்கமாட்டேன்..... நீமட்டும் வந்து சாப்பிட்டுடு. என் தங்கமல்ல.....”

“நிசமா வைக்கமாட்டேன்னு”

“வைக்கமாட்டேன் ....வைக்க மாட்டேன்.....,சத்தியமா வைக்க மாட்டேன்.”

“என்னை அப்பா அப்போ அடிச்சுதுல்லே! நான் அப்பாவோடு பேச மாட்டேன். நீயும் இனிமே பேசக்கூடாது, ஊ.....ம்”

“அப்பாவோடு பேசமாட்டேன்... ...இனிமே உன்னோடுதான் பேசுவேன்........உன்னோடுதான் விளையாடுவேன்......உன்னோடுதான் சாப்பிடுவேன்.....,அப்பாவோடு பேசவே மாட்டேன்! அப்பாவை அடிச்சுத் துரத்திடுவோமா?........”

“ஊ.....ம், இன்னமே என்னோடு தானே விளையாடுவே........”

“நிசமா உன்னோடுதான் விளையாடுவேன். சத்தியம் பண்ணட்டுமா?........சத்தியமா உன்னோடு தான் விளையாடுவேன். முதல்லே நீ சாப்பிட்டாத்தான்.....”

“அப்படின்னா சாப்பிடுறேன். எனக்கு வெள்ளிக் கிண்ணத்துலே போட்டுக் கொடுக்கணும்.....”

தன்னை அடக்குவதற்கென்று, தந்தையார் வைத்திருக்கும் பிரம்பைக் கண்டு அஞ்சும் குழந்தை, அப்பிரம்பை அப்புறப்படுத்தினால்தான் சாப்பிடுவேன் என்று பிடிவாதம் செய்ய, தாயானவள் பிரம்பை வெளியே எடுத்து எறிவதுபோல் எறிந்து, பாவனைகாட்டிக், குழந்தையைச்சாப்பிட வைக்கும் காட்சி —மேலே தீட்டிக் காட்டியிருப்பது. இது போன்ற பல நிகழ்ச்சிகள் அன்றாட வாழ்க்கையில் இருக்கக் காண்கிறோம்.

பிரம்பைக்கண்டுமிரளும்குழந்தை —அக்குழந்தையைத் தேற்றும் தாய் —எட்டியிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் தந்தை. இவர்கள் காட்சியிலேகாணப்படுகிறார்கள்!

குழந்தையைப் பெற்றுவிட்டோம் — அது சொந்தக்குழந்தையாகிவிட்டது—அதற்கு மனம்கோணாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நம்முடையதாகிவிட்டது, என்று உணர்ந்து, அது விரும்பியபடியெல்லாம் செய்துகாட்டத்துணிகிறாள் தாய். ஆகவேதான், பிரம்பை எடுத்து வெளியே எறிவதுபோல் எறிந்து காட்டுகிறாள். பிரம்புபோய் விட்டது, எனவே இனித் தனக்குப் பயமில்லை என்று கருதி மகிழ்ச்சி கொள்கிறது குழந்தை. பிரம்பு வெளியே விழுந்திருந்தால் என்ன? தேவைப்படும்போது, போய் அதனை எடுத்துக்கொள்ளலாம், அல்லது வேறு பிரம்பு தயார்செய்துகொள்ளலாம் என்ற தெளிவோடு, புன்முறுவல் பூத்தவண்ணம், தந்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான்.

ஒருபிரம்பு போய்விட்டால், வேறோர் பிரம்பு வரக்கூடுமே என்ற எண்ணம் அந்தக்குழந்தைக்கு ஏற்படுவதில்லை! எப்படி ஏற்படமுடியும்? அறிவு வளர்ச்சியுறாத சின்னஞ்சிறு குழந்தைதானே. ஆகவேதான், ஒரு பிரம்பு போய்விட்ட நிலையைக்கண்டு குழந்தை மகிழ்ச்சிகொண்டு விடுகிறது.

குழந்தை — சின்னஞ் சிறியது— அறிவு நிரம்பாதது —உலகம் தெரியாதது. எனவேதான் அது தன்னுடைய பிரம்பை எடுத்து எறியச் சொல்லுகிறதே என்பதைக்கண்டோ அல்லது எறிந்துவிட்டதைக் கண்டு

(13-ம் பக்கம் பார்க்க)

ஒருகாலி நாற்காலி

16-ம் பக்கத் தொடர்ச்சி

களும்போவார்கள். சிறுமியாக இருந்த எனக்குத்தின்பண்டங்களைக் கொடுத்து வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, அவர்கள்மட்டும்சென்றிருந்தால்என்வாழ்வு இவ்வளவு கசந்திருக்காது. அந்த நாடகங்களுக்கு என்னையும் அழைத்துச் சென்றார்கள். "கோவலன்" "தூக்குத்தூக்கி" போன்ற நாடகங்கள் நடந்தன. இப்பொழுதுள்ள சீன் அமைப்புகளும் ஜிகினா வேலைப்பாடுகளும், அந்தக் கம்பெனியில் கிடையாது. ஆனால் நடிப்பு இருந்தது. கதையிலும், நாடக அமைப்பிலும் இருந்த பல குறைபாடுகளும் பிரதம நடிகன் தோன்றியதும் மறைந்துவிடும் — அவனுடைய நடிப்புத் திறமையில் ஆயிரத்திலொருபங்கு இன்றைய நாடக ரத்னங்களுக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்தான். அந்த நடிப்பையும், மக்கள் காட்டும் ஆர்வத்தையும் பார்த்தபிறகு நாடகங்களில் நடிக்கவேண்டுமென்ற ஆசைஎனக்கு உண்டாயிற்று. இளம் உள்ளங்களில் அத்தகைய ஆசைகள் தோன்றி மறைவதுண்டு. ஆனால் என் மனதில் அது வளர்ந்தது.

இரண்டு வருஷங்கள் கழித்துமற்றொருநாடகக் கம்பெனி வந்தது. சமயம்பார்த்துக்கொண்டிருந்தநான் அந்தக்கம்பெனி ஊரைவிட்டுப்போகும் பொழுது அவர்களுடன் புறப்பட்டுவிட்டேன், நடிகையாகவேண்டுமென்ற ஆசையால். நான் சேர்ந்த இரண்டாவது மாதத்தில் கம்பெனி கலைந்துவிட்டது. மற்றொரு கம்பெனிக்குப் போனேன். கடன் சுமை தாளாமல், சொந்தக்காரர் கம்பெனியை மற்றொருவரிடம் விற்றுவிட்டார். கம்பெனி வெளியூருக்குப் போனபின் நான் சில வீடுகளில் வேலை செய்தேன். மாதம் முடிந்ததும் எனக்குக்கிடைத்த சம்பளத்தை எடுத்துக்கொண்டு, தூரத்தில் ஆடிக்கொண்டிருந்த பெரிய நாடகக் கம்பெனி ஒன்றுக்குப் போனேன். ஏராளமான கூட்டம், இருந்தபோதிலும் என்னையும் சேர்த்துக்கொண்டார்கள், எனக்கு வீட்டுவேலைகள் செய்யத்தெரியும் என்று சொன்னதின்பேரில். பகலில் சமையற்கட்டில் மிளகாய் அரைத்தும், தண்ணீர் இழுத்தும், வீடுகூட்டியும் வேலைகள் செய்வேன். இரவில் ஏதாவது சில்லரை வேஷங்கள் தருவார்கள். பேச்சு ஒன்றும் இருக்காது. பத்துப் பேரோடு பதினொன்றாக எண்ணிக்கைக்கு நிற்பேன். அதுவேஎனக்குப் பரமதிருப்தியை அளித்தது. பகலில் கால்கடுக்கச் செய்த வேலை, விரல் நகங்களை அரிக்கிற வலி, உள்ளங்கையில் உண்டான கொப்பளங்கள் அவ்வளவு துன்பங்களும் இந்த நாடகத்தின்போது ஆறிவிடும். மேடையில் இருக்கிறோம்—நமக்கும் நாடகத்தில் பங்கு இருக்கிறது என்றுநினைத்துக் கொள்வேன்.

எனக்கு வயதேறியதும் வாத்தியாருக்கும், மானேஜருக்கும் என்மீது "கருணை" பிறந்தது. எனக்கிருந்த சமையல் வேலைகளை மானேஜர் நீக்கினார். வாத்தியார் எனக்கு மூன்றாவது நான்காவது தோழிவேஷங்கள் தந்தார். எனக்கிருந்த பாடம் மிகக் குறைவானது. இருந்தாலும் அதை மிகவும் கவலையுடன் படித்துக் கொண்டிருப்பேன். மற்றவர்களுடன் அடிக்கடி ஒத்திகை பார்த்துக் கொள்வேன். படித்த பாடத்தை வாத்தியாரிடம் சொல்லும்பொழுது சரியாக ஒப்பிக்காவிட்டால், மேற்கொண்டு சொல்லவிடாமல்உதடுகளை மூடிவிடுவார். அப்பொழுதுகூடமனதிற்குள் பாடத்தைச் சொல்லிக் கொண்டிருப்பேன். மானேஜருக்கு இந்தத் தொந்தரவுகள் கிடையாது. "ஏ குட்டி! என்ன முழுமோசமாகிவிட்டது. அந்த விசிறியை எடுத்துக் கொண்டுவா" என்று அதிகாரதோரணையில் என்னை ஆட்டிவைத்தார். மேடையில் தோன்றும் நடிக சிகாமணிகளோ, விளக்குஅணையும்நேரங்களிலும், சீன்கள் மாறும்பொழுதும் விளையாட்டுத்தனமாக நடந்துகொள்வார்கள். இவ்வளவையும் தாங்கிக் கொண்டு நாடகத்தில் இருந்தேன். மற்றக் கம்பெனிகளுக்கு நேரும் கதியே எங்கள் கம்பெனிக்கும் வந்தது. கொட்டகை வாடகையைக் கொடுக்காமல், சீன், தட்டிகளைப் போட்டுவிட்டுச் சொந்தக்காரர் வேறொரு கம்பெனி ஆரம்பிக்கப் போய்விட்டார். பின் இரண்டொரு கம்பெனிகளில் — இருந்துவிட்டு — கடைசியாக வேறுவழியில்லாமல் சினிமாவுக்கு வந்தேன்."

சூடாமணி தன்கதையை முடித்தாள்.

"இப்பொழுது சினிமாவில் நடிப்பது உனக்குப் பிடிக்கிறதல்லவா?" என்றார் சுந்தரம்பிள்ளை.

"நாடகத்தில் நடித்தவர்களுக்கு சினிமா எப்படிப்பிடிக்கும். அங்கு இருக்கும் வேகம், விறு விறுப்பு, உற்சாகம் இங்கு கிடையாது. நாடகத்தில் இரண்டுமணி நேரத்துக்குள் நடிப்பை முடித்துக்கொள்ள வேண்டும். நடித்ததன் பலன் கைமேல். மக்கள் காட்டும் ஆரவாரத்தைக் கேட்கலாம். இங்கு இரண்டு வருஷத்துக்குமேல் பிடிக்கும்நம்முடைய நடிப்பைத் தெரிந்துகொள்ள. அதுவும் டைரக்டர் நாம் நடித்த பாகத்தை வெட்டித்தள்ளாமலிருந்தால். நடிப்பில் குறைகள் ஏற்பட்டால் இங்கு திருத்திக்கொள்ளலாம், மறைத்துவிடலாம். நாடகத்தில் அதற்கு நேரங்கிடையாது. நேற்றைய தினம் காதற்கட்டத்தில் காதலனை கூப்பிடுவதைக் கமலா இருபது தடவைக்குமேல் சொன்னாள். நாடகத்தில் ஒரேதடவைதான், அதற்குள் தன் திறமையைக் காட்டிவிடவேண்டும். சொல்லில் குழைவு, கண்களில் ஒளி, கைவிரல்களில் நெளிவு, உடலில் ஒரு அசைவு, கதாநாயகன் அருகில் வராவிட்டாலும் கைதட்டுதலில் கொட்டகையே அதிர்ந்துவிடவேண்டாமா! இங்கு நமக்குமுன் தூங்கிவழியும் முதலாளியும்,டைரக்டரும், எடுபிடி சாமான்களும் நாடகமாகுமா! படம் எடுத்து முடிந்ததும் பல்லாயிரக்கணக்கானமக்கள்பலவருஷங்கள் பார்க்கிறார்கள் என்றாலும், நம்முடைய நிழலை அவர்கள் பார்க்கிறார்களே தவிர, அவர்களை நாம் பார்க்கமுடிவதில்லை. நாடகத்தில் சிலமணி நேரம், சில நூறுபேர்கள். ஆனால் நேரில் நமக்குக் கிடைக்கும் ஆரவாரமும் உற்சாகமும் இங்கு கிடையாது."

சூடாமணி பெருமூச்செறிந்தாள்.

"பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் பார்த்த நாடகங்கள் — அந்த நடிப்புத் திரும்பவும் வருமா என்பது சந்தேகம் — என்னுள்ளத்தில் ஏற்படுத்திய ஆசை — மயக்கம் இன்னும் போகவில்லை. அதற்காக அன்புடன் வளர்த்த தாய் தந்தையரை விட்டுப்பிரிந்தேன். கைகால் நோக கஷ்டப்பட்டு வேலை செய்தேன், இளமையைப் பறிகொடுத்தேன், இவ்வளவுக்கும் எனக்குச் சில்லரை வேஷங்கள்தான் கிடைத்

தன. இருந்தாலும் சினிமாவில் அரசகுமாரியாக நடிப்பதைவிட நாடகத்தில் ஒரு வேலைக்காரியாக வந்து போவதுமேல்" என்று கூறினாள்.

ஸ்டுடியோ வேலைக்காரன் வந்தான். "இன்றைக்கு ஒன்றும் கிடையாது. கமலகுமாரி வரவில்லை. தூங்கி விட்டார்களாம். வேஷத்தைக் கலைத்துவிட்டுஎல்லோரையும்போகச் சொன்னார்," என்று சொன்னான். சூடாமணி எழுந்தாள். "நான் இங்கேயே காத்திருக்கிறேன். நீபோய்விட்டு வா" என்றார் சுந்தரம்பிள்ளை. சில்லரை நடிகைகளுக்குத் தரப்படும் பாடங்களில் அதுவும் ஒன்று. ஆனால், சுந்தரம்பிள்ளை நல்லவர் என்று பெயரெடுத்தவர். அதனால்தான் இவ்வளவுநேரம் சூடாமணியால் களங்கமின்றிப் பேசிக் கொண்டிருக்க முடிந்தது. அவளுடைய திகைப்பைக்கண்ட சுந்தரம்பிள்ளை "கவலைப்படாதே அதெல்லாம் ஒன்றுமில்லை, நீ போய்விட்டு இங்கேவா." என்றார்.

சூடாமணி திரும்பி வந்திருந்தபொழுது அவளுடையமுகம் இயற்கையான அழகுடன் இருந்தது. அவளை உட்காரச்சொல்லி "நாளைய தினம் இங்கு நடக்கும் ஒரு நாடகக் கம்பெனியில் சேர்த்துவிடுகிறேன். அங்கு இருக்கிறாயா?" என்று கேட்டார்.

"நாடகக் கம்பெனிகளில் வேலையில்லாமல்தானே இங்கு வந்தேன். எனக்கு அங்கு எப்படி வேலைகிடைக்கும்?" என்றாள்.

"உனக்கு விருப்பமிருந்தால் சொல். நான் அந்தக் கம்பெனிக்காரரிடம் சொல்லச் செய்கிறேன்." சூடாமணி சந்தேகத்துடன் தலையசைத்தாள்.

சுந்தரம்பிள்ளை குறிப்பிட்ட கம்பெனி மிகவும் நொடித்த நிலையில் இருந்தது. சுந்தரம்பிள்ளையைக்கண்டதும் அவன் மரியாதையுடன் வரவேற்றபோதிலும், புதுநடிகையைச் சேர்த்துக்கொள்ள மறுத்தான். சுந்தரம்பிள்ளை வற்புறுத்தியதன்பேரில் கடைசியில் ஒப்புக்கொண்டான். நாடக விவகாரங்களைப்பற்றி அவனிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சுந்தரம்பிள்ளை சூடாமணியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

புதிய நாடகமொன்று தயார்செய்யப்பட்டு, அதில் சூடாமணிக்கு முக்கியபாகம் தரப்பட்டது. "ஐயோ! கதாநாயகி வேஷமா, நான் இதற்கு முன்னால் சில்லரை பாகங்கள்தானே நடித்திருக்கிறேன்" என்று சூடாமணி பயந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

'அதிசய நாயனார்கள்'

12-ம் பக்கத் தொடர்ச்சி

பிற்காலத்தில் பெரிய மகான்களாகவே இருப்பதில்லை, மிகச்சாதாரணமானவர்களாகத்தானிருக்கிறார்கள். எத்தனையோ பேர் படுக்கையில் படுத்துறங்கும்போது, பாம்புகள் காலடியில் வந்து படுத்துக் கிடக்கின்றன. படுக்கை விட்டு அவர்கள் எழுந்தவுடன், அவர்கள் முகத்தைப் பார்த்துவிட்டு ஓடிவிடுகின்றன. இதனால், பாம்புகள் அவர்களுக்கெல்லாம் காலையில் வழிபாடு செய்தன என்று கூறுவதா? இன்னும் பாம்புகளோடு பழகி வருபவர்கள், ஆட்டிவைக்கும்படியெல்லாம் அவைகள் ஆடுகின்றனவே, இவைகளையெல்லாம் அதிசய நிகழ்ச்சிகள் என்று கூறுவதா? இத்தகைய நிகழ்ச்சிகளை அதிசய நிகழ்ச்சிகளாகக் கொள்வது எவ்வளவு அறிவற்ற தன்மையாகும் என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

காந்தியாரின் சமாதியை இப்பொழுது வணங்க வந்திருந்த 'பாம்பு நாயனார்' இதற்கு முன்பெல்லாம் வராதிருந்த காரணம் என்ன? காந்தியார் சமாதி கட்டி ஒரு ஆண்டிற்குமேல் ஆகிவிட்டது. இவ்வளவு காலம் தாமதம் ஏன்? காந்தியார் இருக்கும் பொழுதோ அல்லது இறந்தபொழுதோ வந்து அவரைத் தரிசிக்கவேண்டும் என்ற உணர்வு அதற்கு ஏற்படாமல்போவானேன்? இனிமேலாவது அந்தப்'பாம்புநாயனார்' தொடர்ந்துவந்து தரிசிப்பார் என்றுதான்கூறமுடியுமா? அதிசயங்களிடத்தே மக்களுக்குப் பிரேமை இருக்கிறது, ஆகவே அதிசயங்களைக் கட்டிவிடுகிறார்கள் வைதிக விற்பனையாளர்கள்!

சென்ற சில திங்கள்கட்கு முன்பு சென்னை கச்சாலீஸ்வரர் கோயிலில் 'சேவல் நாயனார்' முருகனை வந்து தொழுவதாக 'சுதேசமித்திரன்' படம் போட்டுக் காட்டிப் பாராட்டியிருந்தது. அந்தச் 'சேவல் நாயனாரி'ன் செயலை அதிசய செயலாகக் கொண்டு மக்கள் மடைமையின் காரணமாகத் திரண்டார்கள். இப்பொழுது எங்கே இருக்கிறார் அந்த 'சேவல் நாயனார்'? யார் வயற்றில் எப்படிப்பட்ட கறியாக 'மோட்சம்' போயினாரோ! அந்தச் 'சேவல் நாயனாரை'ப் பற்றிப் பிறகு 'சுதேசமித்திரனா்' கவலைதான் பட்டாரா? இந்தச் 'சேவல் நாயனாரை'ப்போல, நாள்தோறும் லிங்கத்தின் மேலுள்ள எண்ணெயை நக்கிக் குடிக்கவரும் 'பெருச்சாளி நாயனார்', லிங்கத்தின் மேல் புழுக்கைகளையும், சிறு நீரையும் பெய்து கொண்டிருக்கும் 'வௌவால் நாயனார்', லிங்கத்தின் மேலுள்ள தேனை மொய்ப்பதற்காகக் குழுமும் 'எறும்பு நாயனார்', மழை காலத்தில் லிங்கத்தின் அருகே வந்து ஒண்டும் 'தவளை நாயனார்' ஆகிய பல நாயனார்களையும் 'சுதேசமித்திரனும்', 'இந்துவும்', பிறவும், உண்டாக்கினாலுங் கூட நாம் வியப்படைவதற்கில்லை. அவைகளின் போக்கு இன்னும் அந்த நிலையில் தான் இருக்கின்றது.

காந்தியார் சமாதியை இப்பொழுது 'தரிசித்த' பாம்பு 'நாயனாரை'ப் போல, பல 'நாயனார்கள்' சிவனாரையும் தரிசித்திருக்கின்றார்கள். அவர்கள், குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, செல், தேன்வண்டு, நண்டு, யானை, சிங்கம், மயில், அன்னம், புறா, ஆந்தை, பன்றி, ஆமை, முயல், இந்திர கோபப்பூச்சி, கிளி, அன்றில், பாம்பு, தேள், எலி ஆகியவராவார்கள். இவர்களெல்லாம் முத்தி பெற்றவர்களாம்!

காந்தியாரைப் பொறுத்தவரையில், அவர் நாட்டு மக்களைப் பார்த்து அறிவுரை கூறிவரும்போதெல்லாம், தான் ஒரு அவதாரம் அல்லவென்றும், தான் அதிசயங்கள் ஏதும் செய்பவனல்லன் என்றும், ஒரு சாதாரண மனிதன்தான் என்றும் அடிக்கடி கூறிவந்திருக்கிறார்.

அறிவுத் தெளிவினால் மக்கள் முன்னேற வழியேற்பட முடியுமேயொழிய, இத்தகைய 'அதிசய நாயனார்களின்' கதைகளால் ஒருகாலும் வழியேற்படாது; மூட நம்பிக்கை தான் வளரும்!!

அழகர்சாமி குடும்பத்திற்கு

நகைச்சுவை அரசரின் நன்கொடை

ரூ. 6000—0—0

தஞ்சையில் மறத்தமிழனின் மாண்புறுசெயல்

—✻—

தஞ்சையில், ஒருகாலத்தில், யானைகளும், குதிரைகளும், காலாட்படைகளும் அணிவகுத்து நின்ற அரண்மனைத் திடலில், அஞ்சா நெஞ்சன் அழகர்சாமியின் குடும்பத்திற்கு நன்கொடை வழங்கும் நிதியளிப்பு விழா, 29—5—49ம் நாள் ஞாயிறன்று மிகச் சிறப்பாக நடந்தேறியது. விழா நடத்தி, நன்கொடை வழங்கிய வள்ளல், மறத் தமிழனின் மாண்பு மறவாத மறவனாகிய நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணனவார்கள்.

'காந்திமகான் வில்லுப்பாட்டு', 'கிந்தனார் கதைப் பொழுதுபோக்கு' ஆகிய அரிய நிகழ்ச்சிகள் இரண்டையும் நடத்தி, மக்களை மகிழ்வித்து, அதன் மூலமாய்த் திரளும் பணத்தை அழகர்சாமியின் குடும்பத்திற்குக் கொடுப்பதென நகைச்சுவை அரசர் ஏற்பாடு செய்திருந்தார். நிதியளிப்பு விழாவிற்குத் தலைமைவகிக்கவேண்டுமெனத் தோழர் சி. என். அண்ணாத்துரையை நகைச்சுவை யரசர் பணித்தார். அப்பணியினைக் களிப்புடன் ஏற்று நடத்திக் கடமையை யாற்றித் தரத் தோழர் அண்ணாத்துரையும் இசைந்தார்.

மாபெரும் திடல். சுற்றிலும் கோட்டைச் சுவர்கள். ஒருபக்கலில் அழகுற வேயப்பட்ட கீற்றுப்பந்தல். பந்தல பேரொளி பெற்று விளங்கும்படியாகப், பெரும் மின்சார விளக்குகள் பந்தலை நோக்கி ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. பந்தலுக்குள் ஒரு ஆள் உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்டமேடை. அதன் மீது நகைச்சுவை அரசரும், அவரைச் சார்ந்தோரும். வானில் நட்சத்திரங்கள் விளங்குவது போன்று அம்மாபெருந் திடல் முழுவதும் மின்னொளி விளக்குகள். அவற்றின் ஒளியில் வெள்ளம்போல் மக்கட்கூட்டம். இத்தகு சிறப்புக்களோடு விழா தோற்றமளித்தது.

விழாவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சி. என். அண்ணாத்துரை, எஸ். குருசாமி, எஸ். வி. லிங்கம், குடந்தை எஸ். கே. சாமி, நாகை என். பி. காளியப்பன், டி. கே. சீனுவாசன், மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், நாஞ்சில்நாடு எஸ். கே. சாமி, டி. பி. பொன்னுச்சாமி, வழக்கறிஞர் பி. வேணுகோபால், ஸர். ஆர். எஸ். சர்மா, மருதவனம் ஜமீன்தார், ஏ. டி. சுல்தான், ஆகியோரும், அழகர்சாமியின் மனைவி மக்களும், கழகத் தோழர்களும், உத்தியோகஸ்தர்களும், நகரப் பிரமுகர்களும், பொது மக்களும் ஏராளமாக வந்திருந்தனர்.

தென்னாலிராமன் கதையொன்றைக் கூறி, அழகான முறையில் அவையடக்கங் கூறி, கூடியிருந்தோரை சிரிக்கவைத்து, 'காந்திமகான்' வரலாற்றை வில்லுப்பாட்டின் மூலம் விளக்கத் தொடங்கினார் நகைச்சுவை அரசர். பெரியதொரு வில்லின் நாணைக், கையிலே கொண்டுள்ள சிறுகோல் கொண்டு தட்டி, இன்னிசை எழுப்பி, காந்தியார் பற்றிய வரலாற்றுப்பாடல்களைப்பாடி மக்களைத் தன் வயப்படுத்தினார். பிறகு 'கிந்தனார் கதைப் பொழுதுபோக்கு' நடத்தினார். நாட்டில் 'கதைப் பொழுதுபோக்குப்' பண்ணுவோர் மேற்கொள்ளும் வேடத்தைப் புனைந்து, ஆடல் பாடல்களோடு கதை நிகழ்ச்சியைச் செய்தார். மக்கள் அவ்வப்போது சிரித்து, சிரித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி மூழ்கி எழுந்தனர்.

விழாவிற்குத் தலைமை வகித்த தோழர் அண்ணாத்துரை, தமிழனின்மாண்புக்கேற்ப, தக்ககாலத்தில் அழகர்சாமியின் குடும்பத்திற்கு உதவிபுரிய முன்வந்த நகைச்சுவை அரசரின் பெருந்தகைமையைப் பலபடப் பாராட்டி, அவர் செய்த உதவிக்கு, இயக்கத்தின் சார்பாகவும், மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்தார்.

நகைச்சுவைஅரசர் என். எஸ். கே பேசும்போது, அழகர்சாமியின் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆறுயிர ரூபாய்க் கடனைப்போக்குவதற்கே விழா நடத்தியதாகவும், விழாவில் செலவு போக மீதி ரூ 3500 மட்டுமே எஞ்சியுள்ளதாக —வசூல்காரர்கள் தெரிவித்திருப்பதாகவும், அந்தத் தொகையோடு தன்கையிலிருந்து ரூ 2500 போட்டு, அந்த ஆறுயிர ரூபாயை அழகர்சாமியின் குடும்பத்தினரிடம் இரண்டொரு நாட்களில் சேர்த்துவிடுவதாகவும் மொழிந்தார். இதனைக் கேட்ட மக்களனைவரும் ஆரவாரித்து நகைச்சுவை அரசரின் பெருந்தன்மையைப் போற்றினார்கள்.

விழாவில் ஏலம் போட்டுப் பணந் திரட்டுவதற்கென்று, சென்னை பாலு பிரதர்ஸ் அவர்களால், அழகர்சாமியின் வண்ணப்படம் ஒன்று தீட்டி அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் படத்தை நன்கொடையாக அளித்த மாண்பிற்காக அவர்கள் போற்றப்பட்டார்கள். படம் தோழர் எஸ். குருசாமி அவர்களால் ஏலத்திற்கு விடப்பட்டது. தோழர் துரைபாண்டியன் அவர்கள் அதிகப்படியாக ரூ 250க்குப் படத்தை ஏலம் எடுத்தார். அந்தத்தொகையும் நிதியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அழகர்சாமியின் புதல்வர்களான தோழர்கள் இராமமூர்த்தி, டேவிப் ஆகியவர்கள் தோழர் எஸ். குருசாமி அவர்களால் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள்.

விழா வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாகத்தஞ்சைத் தோழர்களும் தோழர் டி. பி. பொன்னுசாமி அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

நகைச்சுவையரசர் என். எஸ். கே. வாழ்க என்று வந்திருந்தோர் வாழ்த்தொலி எழுப்பினார்கள். விழா இரவு 9 மணிக்கு இனிது முடிவெய்திற்று.

திராவிட நாடு

ஞாயிறு] 5—6—49 [காஞ்சி

நல்ல முடிவு

"திராவிடர் இயக்கத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற் சங்கங்களை, நாடெங்கும் ஏற்படுத்துவதற்கான அமைப்புமுறை வேலைகளை உடனடியாகத் துவக்கவேண்டும்"

என்ற கருத்துள்ள தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவரும்படியாக மாகாண திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியை, 7வது கோவை மாவட்டத் திராவிடர் கழக மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது. நீண்ட நாட்களாகத் திராவிடத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருந்த செயல்; அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று இப்பொழுது வற்புறுத்தப்படுவது கண்டு, திராவிடத் தொழிலாளர்கள் அனைவரும் மகிழ்ச்சியுறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரு நாட்டிற்கு வளப்பத்தையும், வனப்பையும் அளித்து, வலுவையும் ஊட்டி வருவது தொழிலாளர் கூட்டமேயாகும். தொழிலாளர்கள், நாட்டின் அச்சாணி என விளங்குபவர்கள். ஆனால் அவர்களின் அவசியத்தை உணராமலேயே முதலாளித்வ மனப்பான்மை கொண்டோர் அவர்களை அலட்சியப்படுத்தி, மமதைப் பாதையிலே செல்கின்றனர். இன்றைய உலகியல் நிலையில் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி, அந்தச் செருக்குமிக்கோரின் உல்லாசக் கோட்டையைச் சிறிது சிறிதாக உடைத்துத் தூளாக்கிவருகிறது. தொழிலாளர்க்கு அத்தகைய விழிப்புணர்ச்சியை ஊட்டவேண்டிய பொறுப்பு அரசியல் அறிவுபடைத்தோரின் நீங்காக் கடமையாகிறது. அதுவும், திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் திராவிடர் கழகம் மேற்கொண்டு பணியாற்றவேண்டிய இன்றியமையாப் பெருங்கடமையாகும்.

சென்ற சில ஆண்டுகளாக திராவிட நாட்டின் பகுதிகளில் தன் இலட்சிய விதைகளைத் தூவும் அடிப்படைப் பணியில் ஈடுபட்டு வந்த திராவிடர் கழகம், தொழிலாளர் கூட்டத்தின் நலன்களைத் தனித் தனியே கவனிக்கவேண்டிய அவசிய கட்டத்தை இன்று அடைந்துள்ளது. பல்வேறு தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டிருக்கும் ஏராளமான தொழிலாளர்கள் திராவிடர் கழகத்தின்குறிக்கோள்களை ஏற்றுக் கழக இலட்சியவாதிகளாக விளங்குகிறார்கள். அவர்கள், முதலாளித்துவம் இழைக்கும் கொடுமைகளினின்றும் தங்களை விடுவித்து, வறுமையைப் போக்கி, நல்வாழ்வு வாழ்வதற்கான வகையைக் கூறும்படி திராவிடர் கழகத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர். அப்படிப்பட்ட காலங்களில் தொழிலாளர்களுக்கு ஏற்ற அறிவுரை கூறியும், அவர்களோடு ஒத்துழைத்து அவர்கள் கோரும் கோரிக்கைகள் வெற்றிபெறச் செய்தும், சமுதாய வாழ்வை எப்படி அமைத்துக்கொண்டால் இன்ப வாழ்வு நடத்தலாம் என்பதைச் சொல்லியும், அவர்களிடத்தே ஒற்றுமை யுணர்ச்சியை உண்டாக்கி, ஒன்று சேர்ந்து நின்று நல்வழிப்படச் செய்தும் ஆற்றவேண்டிய அரும் பணிகள் திராவிடர் கழகத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கிறது —இது இன்னும் வளர்ச்சியடைந்து வரவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

திராவிடர் கழகம், அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் ஆகிய துறைகளில் திராவிடர்களின் பொது நிலையுயரப் பாடுபட்டு வருகிறது. தொழிலாளர் நலன்களைக் குறித்து அவ்வப்போது திட்டங்கள் தீட்டி, அவைகள் வெற்றிபெற உழைத்து வந்திருக்கிறது என்றாலும், அவர்களோடு இரண்டறக் கலந்து நின்று, சிதறிக் கிடக்கும் திராவிடத் தொழிலாளரனைவரையும் ஒன்று கூடச் செய்து, அவர்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி பெறும்படி செய்யவேண்டியது திராவிடர் கழகத்தின் முக்கியமான செயலாக இருக்கிறது. அந்த முக்கியத்துவத்தை அறிந்து, கோவை மாநாடு செய்த முடிவை நல்ல முடிவு என்று கூறி வரவேற்கிறோம். அதை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியையும் கேட்டுக்கொள்கிறோம்.

"பெண்"

10-ம் பக்கத் தொடர்ச்சி

வேடந்தாங்குபவரும் மிக அழகாக நடிக்கிறார்கள். சுந்தரம் வேடம் தாங்குபவரும் குறைவில்லாமல் நடிக்கிறார்.

கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்கு இன்றைய சமுதாயம் இழைத்துவரும் கொடுமைகள் எத்துணையளவாக இருக்கின்றன என்பதை இந்நாடகம் சித்தரித்துக் காட்டுகிறது. இந்த அளவோடு நின்று விடுவதால் கலப்புமணக் கொள்கை ஏற்போர்க்கு அச்சத்தைக் கொடுத்துவிடுமோ என்ற ஐயம் ஏற்படுவதற்கு இடமேற்பட்டுவிடுகிறது. கொடுமைகளைச் சமாளித்து நிற்கும் இயல்பும், அத்தகைய கொடுமையிழைப்போருக்கு இனி இடமிருக்க முடியாது என்ற படிப்பினையும் உடன் சேர்க்கப்பட்டிருப்பின் நாடகம் மிகவும் பயனுடையதாக விளங்கியிருக்கும். நாடகத்தில் வரும்காட்சிகளனைத்தும் ஒன்றோடொன்று காரண காரியங்களால் தொடர்புபடுத்தி வைக்கப்பட்டிருப்பின் மிகவும் நன்றாக இருந்திருக்கும். குறிக்கோளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் கதைப்போக்கிற்கு, எவ்வகையிலும் தொடர்பில்லாத சிலநிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் அகற்றியிருந்தால் நலமாயிருந்திருக்கும். என்றாலும் நாடகம் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நிற்கிறது.

நாடகத்தைப் பாராட்டிப் பேசிய தோழர் அண்ணாத்துரை, "இந்த நாடகத்தின் ஆசிரியர் தோழர் வெங்கடாசலம் எனக்கு நன்கு அறிமுகமான நண்பராவர். அவர் எழுதிய வேறு சில நாடகங்களையும் நடித்துக்காட்ட நான் பார்த்திருக்கிறேன். இந்த நாடகத்தை நோக்கும்போது அவைகளெல்லாம் எனக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லை. இது மிகவும் சிறந்த முறையில் அமைந்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

நாடக சபையின் நிர்வாகிகள், நடிகர்கள், நாடகஆசிரியர் ஆகியோர் தோழர்கள் என். எஸ். கேயாலும், அண்ணாத்துரையாலும் பாராட்டப் பெற்றனர்.

எழுத்தாளர் மாநாடு

"எழுத்தாளர்களுக்கு முதல் எதிரி பயம். பயம் ஒழிந்தால் தான் எழுத்தாளன் தலைநிமிர்ந்து நிற்க முடியும்."

என்று புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்கள், 29—5—49 ஞாயிறன்று, திருச்சி தேவர் மண்டபத்தில் நடைபெற்ற திருச்சி மாவட்டத் தமிழ் எழுத்தாளர் மன்றம் முதல் ஆண்டு மாநாட்டில், தலைமையேற்றுச் சொற்பொழிவாற்று கையில் குறிப்பிட்டார்கள்.

விழா, காலை 9—30 மணிக்குத் துவக்கப் பெற்றது. எழுத்தாளர்களும், கலையார்வங் கொண்ட மக்களும் மண்டபத்தினுள் வந்து குழுமி நிறைந்து காணப்பட்டனர்.

மாநாட்டைத் திறந்து வைக்கும் படியாகத் தோழர் சி. பி. சிற்றரசை மன்றத் தலைவர் கேட்டுக்கொண்டார். செயலாளர் வழி மொழிய, தோழர் சி. பி. சிற்றரசு, வாளினும் வலிது எழுதுகோல் என்பதை விளக்கி, எழுத்தாளர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் இன்னவை என்பதையும் உணர்த்தி, மாநாட்டைத் திறந்து வைப்பதாகச் சொல்லிப் பெருங் கையொலிகளுக்கிடையே அமர்ந்தார்.

மாநாட்டைத் தலைமை தாங்கி நடத்திக்கொடுக்கும்படியாக, மன்றத்தாரால், புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். புரட்சிக் கவிஞர் தலைமையிடம் சேர்ந்து, நகைச்சுவையரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை, ராஜா சாண்டோ அவர்களின் படத்தைத் திறந்துவைக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார்.

நகைச்சுவையரசர் எழுந்தார். மக்களிடையே மகிழ்ச்சி மலர, சிரிப்பொலி கொட்ட, கைதட்டல் முழங்க தனக்கே இயல்பான ஒருவகை ஆட்ட அசைவோடு ஒலிபெருக்கி முன்வந்து நின்றார். இதற்குள் வாயிற்கதவை மோதிக் கொண்டிருந்த மக்கள் வெள்ளம், கட்டுக்கோப்பை உடைத்துக்கொண்டு, பெருக்கெடுத்து உள்ளே நுழைந்து எங்கும் பரவி நிற்கத் தொடங்கிற்று. தோழர் என். எஸ். கே. பேசத் தொடங்கினர். அமைதி நிலவிற்று. ராஜா சாண்டோ அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இளமைப் பருவம் முதல் அவரிடத்திலே காணப்பட்ட கடமை யுணர்ச்சியையும், திரைப்பட உலகில் ஆரம்ப காலங்களில் அவர்பட்ட அரும்பாடுகளையும், தமிழ்த் திரைப் படங்கள் சிறந்தோங்கி மிளிர அவருடைய தொண்டு எவ்வெவ் வகையில் போற்றக்கூடியனவாக இருந்தது என்பது பற்றியும் தாய்நாட்டைச் சேர்ந்த இளம் நடிகர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர எத்துணை அளவு அக்கரை காட்டிவந்தார் என்பது பற்றியும், நகைச்சுவையரசர் அவர்கள் விரிவாகவும், தெளிவாகவும், நகைச்சுவை ததும்பும் வண்ணமும் எடுத்துரைத்துப், பெரும் அளவில் அழகுற வண்ணங்களால் தீட்டப்பட்டிருந்த ராஜா சாண்டோ அவர்களின் படத்தைத் திறந்துவைத்தார். மக்கள் கைகொட்டி வரவேற்றுரவாரித்தனர்.

திருச்சி தேவர் மண்டபத்தில் வைப்பதற்கென்று திறக்கப்பட்ட முதல் படம் இதுதான். நாடக அரங்குகளுக்கு ஏற்ற இடமாகத் திகழ்ந்து வரும் அம்மண்டபத்தில், ராஜா சாண்டோ போன்ற புகழ் பெற்ற நடிகர்களின் படங்கள் அழகைச் சிந்தி நிற்பது, வரவேற்க வேண்டியதொன்றாகும்.

அடுத்து தோழியர் கமலவேணி, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கி. ஆ. பெ. விசுவநாதன், எஸ். குருசாமி, சி. என். அண்ணாத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

மன்றத்தாரின் விருப்பத்திற்கிணங்கி, புரட்சிக் கவிஞரவர்கள், தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் "புரட்சி விகட வேந்தன்" என்ற பட்டத்தை வழங்கினார்கள். புரட்சி விகட வேந்தர் —நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஏற்றமுறையில் பதில் கூறி நன்றி செலுத்தினார்கள்.

புரட்சிக் கவிஞர் இறுதியாகப் பேசும்போது, எழுத்தாளர்களுக்கு இருக்கவேண்டிய பண்பைத் தெள்ளத் தெளிய விளக்கிக் கூறினார். தாய் மொழி, தாய் நாடு, தாய் நாட்டுப் பண்பு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைஎவனொருவன் தன்னுள்ளடக்கிக்கொண்டு, அவற்றிற்குமாறுபாடு ஏற்படாவண்ணம் எழுத முற்படுகிறானோ அவன்தான் எழுத்தாளன்—கவிஞன் ஆகமுடியும் என்றும், பிறநாட்டு இலக்கியங்களை மொழி பெயர்த்துக் காட்ட முற்படுவானேயானால், அவற்றிடத்துப் பொதிந்து கிடக்கும், முரண்பட்ட பண்பு பழக்க வழக்கங்கள் தன் சொந்த நாட்டிற்கு ஏலாதனவாக அமைந்து விடுவதோடு, சொந்த நாட்டை இழிநிலைக்குக் கொண்டு போகவும் அவைகள் காரணமாக இருக்கின்றன, அப்படிப்பட்ட செயலைச் செய்பவனை நாடு எழுத்தாளன் என்று ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும், கம்பன், தமிழ் நாட்டிற்குப் புறம்பான பழக்க வழக்கங்களைக் கொண்ட வடமொழி நூலை மொழி பெயர்த்துக் கூறத் தொடங்கியதன் காரணமாகத் தன் சொந்த நாட்டிற்குப் பொருந்தாத செயலைச் செய்தான்; ஆகவேதான் அவனைச் சிறந்த எழுத்தாளன் என்று ஏற்றுக்கொள்ள நாடு மறுக்கிறது என்றும் கூறினர். எழுத்தாளர்களுக்குச் சிறப்பாகவேண்டப்படுவது ஒழுக்கம் என்றும், அந்த ஒழுக்கம் தொல்காப்பியத்துள் சிறந்து காணப்படுகிறது என்றும், அதனைக் கைக்கொள்ள எழுத்தாளர்கள் முனைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மேலும் எழுத்தாளர்க்கு முதல் எதிரி பயம் என்றும், அந்தப் பயத்தை ஒழித்தால் தான் எழுத்தாளன் தலை நிமிர்ந்து நிற்கமுடியும் என்றும் கூறினர்.

பிறகு நன்றி கூறலுடன் பகல் ஒரு மணிக்கு மாநாடு இனிது கலைந்தது.

✻

"சிலம்பு"

தோழர் A. K. வேலன் தீட்டிய "சிலம்பு" நாடகம் கோவையில் இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபாவில் 5—6—49-ல் கடைசி நாளாக அண்ணாத்துரை தலைமையில் நடைபெறும்.

"பெண்"

"நான் இரண்டு மூன்று இடங்களிலே அழுதுவிட்டேன். அந்த அளவுக்கு என்னைத் தன்வயப்படுத்திவிட்டது இந்த நாடகம். குழந்தையை ஏந்திக்கொண்டு வந்த அந்தப்பெண்ணை அவன் அறையும் பொழுது நான் அழுதுவிட்டேன். மேடையிலே ஏறி அவனுக்கு ஒரு அறைகொடுக்கலாமாஎன்றுகூடஎண்ணினேன். நானே ஒரு நடிகனாதலால், என்னையும் நடிப்பவனாகவே நீங்கள் கருதிவிட்டால் என்ன செய்வது என்று நினைத்துதான் சும்மா இருந்துவிட்டேன். இந்த நாடகத்தைச் சினிமாவில் கொண்டுவர நான் கலந்து முயற்சி எடுத்தாலும் எடுக்கக்கூடும்" என்று தஞ்சை இராமனாதஞ்செட்டியார் ஹாலில் நடைபெறும், "பெண்" என்ற நாடகத்தைப் பாராட்டிப் பேசும்போது நகைச்சுவை வேந்தர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"பெண்" என்ற அந்த நாடகம், தஞ்சையில், தேவிநாடக சபையாரால் சென்ற சில நாட்களாக நடிக்கப்பட்டு வருகிறது. அழகர்சாமியின் நிதி விழாவிற்குச் சென்ற நகைச்சுவையரசர், புரட்சிக்கவிஞர், அண்ணாத்துரை ஆகியோர் 29—5—49-ம் நாள் இரவு நாடகத்தைக்காண்ணுறும்படி அழைக்கப்பட்டார்கள். நாடகத்தின் இறுதியில்நாடகத்தையும், அதன் ஆசிரியரையும் பாராட்டி நகைச்சுவை அரசரும், அண்ணாத்துரையும் சொற்பொழிவாற்றினார்கள்.

கலப்புமணம் செய்துகொண்ட இடைத்தர வகுப்பைச்சார்ந்த ஒரு குடும்பம். அக்குடும்பத்தினர்க்கு ஒரே பெண்குழந்தை. பெயர் கண்மணி. அந்தப்பெண்ணால் அத்தான் என்று அழைக்கப்படும் முறையுள்ள சுந்தரம் என்ற இளைஞன். அந்த இளைஞனுக்கே கண்மணியைத் திருமணம் செய்துகொடுக்க அவள் இளமைப்பருவத்திலேயே பெற்றோர்கள் எண்ணமிட்டு விட்டார்கள். சுந்தரம் பிழைப்பிற்காக சிங்கப்பூர் சென்று அங்கு ஒரு எழுத்தாளனாக இருந்து வாழ்க்கை நடத்தி வருகிறான். என்றாலும் அவன் கண்மணியின்மீது கொண்டிருந்த காதல் மட்டும் நீங்கவில்லை. சுந்தரம் எங்கு சென்றான் என்பது கண்மணி குடும்பத்தினர்க்குத் தெரியவில்லை. கண்மணிக்கு உரிய பருவம் வந்தபிறகு, அவளை மணம் முடித்துவைக்கச் சுந்தரம் அகப்படாததுகண்டு, யாரேனும் ஒரு இளைஞனுக்கு மணம் முடிக்கப் பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். கண்மணியின் தாயும் தந்தையாரும் வெவ்வேறு சாதியினர் என்ற காரணத்திற்காக யாரும் மணம் செய்துகொள்ள முன் வந்தபாடில்லை. இதனால் தந்தை மனவருத்தமடைகிறார். அதுகண்டு கண்மணி மனங்கலங்குகிறாள்.

கண்மணியை அடிக்கடி சந்தித்துத் தன் மனதை அவள்பால்விட்டுவிட்ட மாணவன் அரங்கசாமி என்பவன். அரங்கசாமி வைதிக குடும்பத்தைச் சேர்ந்தவன். அந்தக்குடும்பம் வேற்றூரில் இருக்கிறது. அரங்கசாமி கண்மணியின் நிலைமையைக் கண்டு, இரக்கமுற்று, தன் தாய் தந்தையர்க்குத் தெரியாமல் கண்மணியை மணம் செய்துகொள்ள ஒப்புகிறான். மணம் முடிந்து விடுகிறது. இருவரும் இன்பவாழ்வு நடத்துகிறார்கள். இந்த நிலையில் சிங்கப்பூரிலிருந்து சுந்தரம் தாய் நாடு திரும்புகிறான். தனக்கே உரியவள் என்று பாதுகாத்து வரப்பட்ட கண்மணி வேறொருவனுக்கு மனைவியாகிவிட்ட செய்தியை அறிகிறான். மனமுடைகிறான். மனதைத் தேற்றிக்கொண்டு, கண்மணியும் அரங்கசாமியும் இன்பவாழ்வு நடத்தட்டும் என்றே கருதுகிறான். என்றாலும் சுந்தரத்தின் வாழ்வு நிலைகுலைந்துவிட்டது.

கண்மணி கருவுற்றிருக்கிறாள். இந்த நிலையில், மகன் நீண்ட நாட்களாக ஊருக்கு வராததுகண்டு மனம் நொந்த தாய் தந்தையர் அரங்காமிக்குத் தந்திகொடுத்து, அவனை வரவழைக்க எண்ணுகிறார்கள். கண்மணியை விட்டுப்பிரிந்து ஊருக்குப்போக மறுக்கிறான் அரங்கசாமி. கண்மணி தன் காதற்குரிய அரங்கசாமியை ஊருக்குச் சென்று பெற்றோர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பும்படியாக வற்புறுத்துகிறாள். அரங்கசாமி ஊருக்குச் செல்லுகிறான்.

அரங்கசாமிக்கு மணம் முடிக்க பெற்றோர்கள் திட்டமிடுகிறார்கள். தான் முன்பே மணம் முடித்துக் கொண்டுவிட்டேன் என்று பல முறை சொல்லித் தனக்கு வேறோர் திருமணம் வேண்டாம் என்று வாதாடுகிறான் அரங்கசாமி. பெற்றோர்கள் வசைமாரி பொழிந்து, சொந்தச் சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணம் முடிக்க முடிவு செய்து அவனை இணங்க வைக்கிறார்கள். பெற்றோரின் வலுக்கட்டாயத்திற்குக் கீழ்படிந்த அரங்கசாமி மணம் முடித்துக்கொள்கிறான். கண்மணியை மறந்துவிடுகிறான். புதிதாக மணம் முடித்துக்கொண்ட சிவகாமியும், கண்மணியும் இளம்வயதில் நண்பினராவார்கள்.

கண்மணிக்கு ஆண்குழந்தை பிறக்கிறது. பிறந்து பலநாட்கள் வரையிலும் அரங்கசாமி திரும்பாததைக் கண்ட கண்மணி வருந்துகிறாள். கணவனுக்குக் கடிதம் எழுதுகிறாள். அரங்கசாமி கடிதங் கண்டு கலங்கினான் என்றாலும், பெற்றோர்களுக்கும், புதிய மனைவிக்கும் பயந்து கண்மணியையும், அவள் குழந்தையையும் கைவிட்டுவிடவே எண்ணி ரூ 500 செக்காக அனுப்பிவைக்கிறான்.

பிறகு கண்மணி குழந்தையைத் தூக்கிக்கொண்டு நேரே செல்லுகிறாள். அரங்கசாமி அவளையும் குழந்தையையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். ஏங்கித் திரும்பும் போது சிவகாமியைச் சந்திக்கிறாள். குழந்தையைக் கொண்டு செல்லும்படி சிவகாமிக்குக் கூறிவிட்டு, குளத்தில் வீழ்ந்து கண்மணி மடிகிறாள். அரங்கசாமி, சிவகாமி ஆகியோர் பின்பு அலறித் துடித்து ஓடுகிறார்கள். அவள் பிணக்கோலத்தைக் காணுகிறார்கள். கதறுகிறார்கள். இது தான் கதையின் சாரம்.

இந்த அரிய கதையைத் தீட்டி நாடகமாக ஆக்கித் தந்தவர் தோழர் ரா. வெங்கடாசலம் என்ற உணர்ச்சியுள்ள இளைஞராவார். நாடகம் விறுவிறுப்பு வாய்ந்துவிளங்குகிறது. நடிகர்கள் அனைவருமே மிகவும் பாராட்டத் தகுந்த மாதிரியில் நடித்துக்காட்டுகிறார்கள். அரங்கசாமி வேடந் தாங்குபவரும், கண்மணி

(8-ம் பக்கம் பார்க்க)

"அதிசய நாயனார்கள்"

ஒரு பொருளுக்கு, அதற்கு இயல்பாகவே இல்லாத பெருமையும் புகழும் ஏற்படவேண்டுமானால், இயற்கைக்கு மாறான ஆற்றல்கள் அந்தப் பொருளிடம் உண்டு என்றோ, அல்லது இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கு அது காரணமாக இருக்கிறது என்றோ, கற்பனை செய்தால் தான் இயலும் என்ற மனப்பான்மை, வைதிகர்களிடையே இருந்துவரக் காண்கிறோம். இந்தக் கற்பனை எண்ணம் எல்லா நாட்டு வைதிகர்களிடத்தும் காணப்படுவதொன்றாகும் என்றாலும், இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் வைதிகர்களிடத்துச் சற்று மிகவாகவே தொன்றுதொட்டு இது இருந்து வருகிறது.

கடவுளுக்கும், மதத்திற்கும் பெருமையை உண்டாக்க வேண்டி, மனித ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட பல அரிய நிகழ்ச்சிகளைக், கடவுளோடும், மதத்தோடும் தொடர்பு படுத்திக் காட்டவேண்டிய அவசியம் கடவுள் பக்தர்களுக்கும், மத போதகர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் தான் ஒவ்வொரு கடவுள் பக்தரும் தத்தம் கடவுளர் இன்னின்ன அற்புத நிகழ்ச்சிகளைச் செய்து காட்டியிருக்கிறார்கள் என்றும், இன்னின்ன ஆற்றல்களைப் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் கூறித் தத்தம் கடவுளுக்குப் பெருமையும், புகழும் தேட முற்படுகிறார்கள். அதன் காரணமாகத்தான், ஒவ்வொரு கடவுளும் புரிந்ததாகக் கற்பிக்கப்படும் அதிசயங்களெல்லாம், புராணக் கதைகளாக உருவாக்கப்பட்டு மக்களிடையே நடமாடும்படி விடப்பட்டிருக்கின்றன.

மக்கள், பொதுவாகத் தம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையில், இயற்கை நிகழ்ச்சிகள் நிகழ்வதை நன்றாய்க் கூர்ந்து கவனித்துவந்து, அவற்றின் தன்மைகளை நாளடைவில் வரையறுத்துக்கொண்டு விட்டார்கள். இயற்கை நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கும் அடிப்படைக் காரணங்களைக் கூடியமட்டும் அறிகிறார்கள். காரணம் அறியமுடியாத நிலைகளில், காரணம் யாதாக இருக்கலாம் என்று ஊகிக்கத் தொடங்குகிறார்கள். காரணத்தைக் காண ஆவலுறுகிறார்கள். இந்த இடத்தில் தான், அதாவது காரணம் அறியமாட்டாமல் திகைத்து நிற்கும் இடத்தில்தான், கடவுளைக் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள் மத போதகர்கள். காரணம் அறிய முடியாத நிகழ்ச்சிகள் உண்டாவதற்குக், கடவுளிடம் காணப்படும் அரிய ஆற்றல்களே அடிப்படைக் காரணங்களாகும் என்று செப்புகிறார்கள்.

சாதாரண ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட பேராற்றல்கள் படைத்ததாக 'ஒரு பொருள்' மக்கள் முன் வைக்கப்படும்போது, அதனிடத்தே ஒருவகை வியப்பு, அவ்வியப்பின் காரணமாக ஒருவகை மகிழ்ச்சி, அம்மகிழ்ச்சியின் காரணமாக ஒருவகை ஆசை, அவ்வாசையின் காரணமாக ஒருவகை அன்பு, அவ்வன்பின் காரணமாக ஒருவகை அடிமைத்தனம், அவ்வடிமைத்தனத்தின் காரணமாக ஒருவகை அச்சம், அவ்வச்சத்தின் காரணமாக ஒருவகைப் பக்தி, இவ்வளவும் ஏற்பட்டுவிடுகின்றன. மனித ஆற்றலுக்கும், இயற்கைச் சக்திக்கும் அப்பாற்பட்டதாக ஏற்றிச் சொல்லப்படும் எதையும், நம்பவேண்டுமென்பதும், அதற்கு வணக்கஞ் செலுத்தவேண்டும் என்பதும் வழிவழிப் பழக்கமாக வந்துவிட்டன.

கடவுளுக்குப்பெருமையையும், புகழையும் கொடுக்கவேண்டி அவர் செய்ததாகப் பல அற்புதக்கதைகளை மக்கள் முன் வைக்கிறார்கள். அதுபோலவே மக்களிலேயே சிலருக்குத் தனிப்பட்டபுகழும், பெருமையும்ஏற்படவேண்டும் என்பதற்காக, சில அற்புத நிகழ்ச்சிகளை அவர்களோடு கூட்டிக் காண்பிப்பது வைதிகர்களுடைய தொன்று தொட்டுப் பழக்கமாக ஆகிவிட்டது. மற்றச் சாதாரண மக்களினின்றும் சிலரைத் தனித்துப் பிரித்து உயர்த்திக்காட்ட வேண்டுமானால், பல அதிசயநிகழ்ச்சிகளை அவர்களுக்கு உரிமையாக்க வேண்டும்என்றமுயற்சியில்ஈடுபட்டு, அதற்கான வழிகளைத் தேடவும் தவறுவதில்லை வைதிகர்கள். ஒரு சிலர் தங்களிடத்தே மிகுத்துக் காணப்படும் சில ஆற்றல்களை வைத்துக்கொண்டு, அவற்றின் மூலம் மற்றவர்களை ஏமாறவைத்தும், தங்களிடத்தே அளவுக்கு மிஞ்சிய ஆற்றல் இருப்பதாகப் பிறரை எண்ணும்படி செய்தும், தாங்கள் ஆண்டவனோடு ஒத்த பெரும் பிறவிகளாவோம் என்று சொல்லியும், தங்களை மகான் என்றும், ரிஷி என்றும், முனிவர் என்றும், ஆழ்வார் என்றும் பிறர் அழைக்கும்படிசெய்துகொள்ளுகிறார்கள். சிந்திக்கும் ஆற்றலற்ற மக்கள் இவற்றையெல்லாம் நம்புகிறார்கள். இவ்வித நம்பிக்கையால் பலனேதும் இதுவரையில் கண்டார்களா என்றால், இல்லை!

பலரிடத்தே சுருங்கிக் காணப் சில ஆற்றல்கள், சிலரித்தே மட்டும் பெருகிக்கிடக்கக் காண்கிறோம். சில அரிய பெரிய ஆற்றல்கள் இருக்கும் காரணத்தாலேயே அச்சிலருக்குப் பெயரும், புகழும் இயற்கையாக ஏற்படுவதுண்டு. அவர்களைப் பெரியவர்கள் என்றும் போற்றுவார்கள். அவர்களின் பெயரையும், புகழையும் மேலும் கூட்டிக்காட்டவேண்டி, சில அதிசயங்களை அவர்களோடு பொருத்திக் காட்டும் மூடப்பண்பு இந்நாட்டில் ஏராளமாக இருந்தது; இன்னும் இருந்துவருகிறது.

* * *

காந்தியார், இந்திய துணைக்கண்டத்தில் அரசியல் விழிப்புணர்ச்

சியை ஏற்படுத்தினார்; விடுதலைக் கிளர்ச்சிப் படைக்குத் தலைமை தாங்கினார்; உரிமைப் போருக்கு நாட்டு மக்களை ஊக்குவித்தார்; மக்களிடம் காணப்படும் பேதம், பிளவுகளைப் போக்கப் பாடுபட்டார்; மக்கள் நல்வாழ்வு நடத்த அறிவுரை பகன்றார்; இவற்றின் காரணமாக அனைத்திந்திய மக்களும் அவரிடம் அன்பு கொண்டார்கள். மக்களுடைய அன்பையெல்லாம் தம்பால இழுத்துக்கொள்ளக்கூடியவொரு பேராற்றல் காந்தியாரிடத்துக் காணப்பட்டது. அதன் காரணமாக அவரை உத்தமர் என்றும், வழிகாட்டி என்றும், பெரியார் என்று பொருள் படக்கூடிய "மகாத்மா" என்றும் அழைத்தனர் நாட்டுமக்கள். இத்தகைய உண்மையான காரணங்களாலேயே அவருக்குப் பெயரும், புகழும் இங்கு பிறர் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு வளர்ந்து உயர்ந்து விளங்கிற்று.

நல்ல—உயர்ந்த—உரிய பல காரணங்களைக்காட்டிக் காந்தியாரின்பெயரையும், புகழையும் நிலைநாட்டும் சீரிய பணியினின்றும் விலகி வைதிக உலகிற்குத் தாண்டி, பல அதிசயங்களை அன்னாரோடு தொடர்பு படுத்திக் காட்டும் 'திருப்பணி'யில் சிலர் இப்போது இறங்கி இருக்கிறார்கள். அதிசயமாகக் கூறப்படும் எதையும் நம்புவதற்கு மக்கள் ஏராளமாக உள்ளனர் என்ற ஒரே நம்பிக்கைதான் அவர்களை இவ்வாறு இன்னமும் செய்யச் சொல்லுகிறது போலும்!

காந்தியாரின் சமாதியைக் கருநாகம் ஒன்று வலம்வந்து தரிசித்த 'அற்புத நிகழ்ச்சி' ஒன்று 1–6–49 'இந்து' இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அதிசய நிகழ்ச்சியை அறிவிப்பவர், டில்லி ராஜ்காட்டிலுள்ள, காந்தியாரின் சமாதிக் கட்டிடத்திற்குப் பாதுகாவலராக இருந்துவரும் தோழர் மனோகர்லால் என்பவராவார். அண்மையில் ஓர் நாள் தோழர் மனோகர்லால், சமாதிக்கு வழிபாடு செய்யும் பொருட்டு, விடியற்காலையில் சென்றாராம். அப்பொழுது பெரியகரும்பாம்பு ஒன்று, சமாதிக்கட்டிடத்திற்குள் நுழைந்ததாம். அதனைத் தொந்தரவு செய்யாமல் அது என்ன செய்கிறது என்பதை ஆச்சரியத்தோடு கவனிக்கத் தொடங்கினாராம். அந்தப் பாம்பு சமாதியை மெதுவாக ஒரு சுற்றுச் சுற்றி வந்து, சமாதிக்கு ஏறும் படிக்கட்டுகளண்டையில் நின்றதாம். அதற்குள் பகலவனும் தோன்றிவிட்டானாம்; மக்களும் வழிபாட்டிற்காக வந்து விட்டார்களாம். பலர் அப்பாம்பைக் கொல்ல முயற்சி செய்தார்களாம். தோழர் மனோகர்லால் அவர்களை அவ்வாறு செய்யவேண்டாம் என்று தடுத்தாராம். சில நேரங்கழித்துப் பாம்பு மெதுவாக அவ்விடத்திலிருந்து பாய்ந்து, பக்கத்திலுள்ள புதரிலேபோய்மறைந்து விட்டதாம். இந்த நிகழ்ச்சியைத் தோழர் மனோகர்லால் 'இந்திய ஐக்கிய 'பிரஸி'டம் கொடுக்க, அது 'இந்து' போன்ற செய்தி இதழ்களிலே வந்துள்ளது.

காந்தியாரின் சமாதிக்கு, ஒரு பாம்பு வந்து சென்ற நிகழ்ச்சி, ஒரு அதிசயமாக எண்ணும்படி செய்யப்பட்டுவிட்டது. இதைத்தான் வைதிகம் பரம்பரை பரம்பரையாகச் செய்துவருகிறது! அதாவது, காந்தியாரின் அருமை பெருமைகளைக் கருநாகம் உணர்ந்திருப்பது போலவும், அத்தகையவரின் சமாதிக்கு வழிபாடு செய்யவேண்டிய கடமையுணர்ச்சியை அது கொண்டது போலவும், வழிபாடு செய்வதென்றால் ஒரு சுற்றுச் சுற்றி வந்து எதிரே நின்று வணங்குவதாகும் என்பதை அது அறிந்திருப்பது போலவும், ஆகவேதான் அப்பாம்பு அன்று காலை அங்கே வந்துவிட்டுச் சென்றுள்ளது போலவும் மக்கள் கருதும்படி நிகழ்ச்சி வெளியிடப்பட்டிருக்கிறது. இரு வேறு சம்பவங்கள் தற்செயலாக இணையும்போது, அதைக் குறிப்பிட்டு அதிசயமாகக் காட்டும் பழக்கம் இந்நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற நாடுகளிலுங்கூட இருந்து வருகிறது. இரு வேறு சம்பவங்கள் இணைவதை "காக்கை உட்காருவதற்கும், பனம் பழம் விழுவதற்கும்" என்ற பழமொழியால் அறியலாகும்.

காந்தியார் சமாதியிடத்து, பாம்பு வந்திருக்கலாம்! இது சாதாரணமாக நடக்கக்கூடியது. பாம்பு, சமாதி இரண்டும் வெவ்வேறு பொருள்கள், இவையிரண்டும் தற்செயலாக இணையும்போது அதிசயக் கற்பனை கட்டிவிடப்படுகிறது. பாம்பு காந்தியார் சமாதியைத் தரிசிக்க வந்தது என்று மக்கள் கருதும்படியும், இதுவொரு அதிசய நிகழ்ச்சி என்று பக்திகொள்ளும் முறையிலும் பறை சாற்றப்படுகிறது. பாம்பு சமாதிமேல் படுத்துறங்குதலும், சமாதிகளிலே குடியிருத்தலும், சமாதியைச் சுற்றிவருதலும், சமாதிக் கற்களைச் சுற்றிக்கொண்டு கிடத்தலும், சமாதியைத் தாண்டிப் பாய்தலும், சமாதிக்கு முன் சுருட்டிக்கொண்டு படுத்து கிடத்தலும் நடக்கக்கூடாத—நடக்க முடியாத நிகழ்ச்சிகள் அல்ல. காந்தியார் சமாதியில் மட்டுமல்ல, நாட்டில் காணப்படும் வேறு பல சாதாரண சமாதிகளினண்டையில் கூட இத்தகு நிகழ்ச்சிகளைக் காணுகிறோம். தற்செயலாக வந்த பாம்பு, சமாதியைத் தரிசிக்கவே வந்தது என்னும் கருத்துப்படும்படி, கனவு காண்பது எவ்வளவு அறியாமையின்பாற் பட்டது என்பதை ஆய்ந்துணர்க. இத்தகைய நிகழ்ச்சிகளை மிகைப்படுத்திக் கூறுவதன் காரணமாக, சிந்திக்கும் ஆற்றல் அற்ற மக்கள் மயக்கமுறுகிறார்கள்; அவற்றை நம்பத் தலைப்படுகிறார்கள்.

இதற்கு முன்பு, காந்தியார் நவகாளியில் கால்நடையாகச் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, வழியில் பாம்பு ஒன்று வந்து தலையைத் தூக்கிக் காந்தியாரைப் பார்த்துவிட்டுச் சென்றதாம். அதுபற்றிக் கூறும்போது, காந்தியாரைப் பாம்பு தரிசித்துவிட்டுச் சென்றது என்று குறிப்பிட்டார்கள். சாதாரணமாக நாம் நடந்து போகும்போது கூடப் பாம்பு தலையைத் தூக்கி நம்மைப் பார்த்துவிட்டு, வேறுபக்கமாக ஓடி நழுவிவிடுகிறதை, அன்றாட நிகழ்ச்சியில்கூடக் காண்கிறோம். சாதாரண ஆட்களைப் பொறுத்து நிகழும் நிகழ்ச்சிகள், காந்தியாரைப்பொறுத்தும் ஏற்படும்போது, அது எப்படி அதிசயமாக மாறமுடியும்! எத்தனையோ வீட்டில், குழந்தை தொட்டிலில் தூங்கும்போது, பாம்பு தொட்டிலில் ஏறி குழந்தையைப் பார்த்துவிட்டு, சில சமயங்களில் ஒன்றும் செய்யாமல் கீழே நழுவி ஓடிவிடுகிறது. இதைக்கொண்டு அப்பாம்பு குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்தது என்று கூறிவிடுவதா? சிறு குழந்தைப் பருவத்தில் அப்படிப் பாம்புகளால் 'ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்',

(6-ம் பக்கம் பார்க்க)

சுவாமிகளின் திருவிளையாடல்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

அது மகிழ்கிறதே என்பதை அறிந்தோ தந்தை ஆத்திரப் படுவதில்லை; குழந்தையின் அறியாமை கண்டு, அதிலே கேலிச்சிரிப்புக்கு இடமிருப்பது கண்டு புன்முறுவல் பூத்து நிற்பான்.

இத்தகைய காட்சி சாதாரணமாக குடும்பங்களிலேமட்டும் காணப்படுவதொன்று என்று கருதவேண்டாம். பொது வாழ்க்கையிலும் இத்தகைய காட்சிகள் ஏற்படாமல்இருப்பதில்லை. அந்த அளவுக்குப் பொது வாழ்விலும் அறியாமையின்பாற்பட்ட சிறுபிள்ளைத்தனம் இருக்கத்தான்செய்கிறது.

தில்லையம்பதியிலே, நந்தனூர்மடத்தின் சன்னிதானப் பீடமமர்ந்து, மடாதிபதியாகஎழுந்தருளியிருக்கும் "சுவாமிகாள்" சகஜானந்தம் அவர்கள், அண்மையில், மேற்குறித்தது போன்றவொரு காட்சியைப் பொது வாழ்க்கையில் உண்டாக்கி வைத்திருக்கிறார். அதன் பெருமை அனைத்தும் அவருக்கேதான் உரித்தாகும்!

சகஜாநந்த 'சுவாமிகள்' மே திங்கள் 22-ம் நாள், தன்னுடைய 'ரத, கஜ, துரக, பாதாதி'களோடு சேப்பாக்கம் கிராமச் சேரிக்குச் சென்றதாம். அந்தச் சேரியில் கறுப்புக் கொடி ஒன்று பறந்துகொண்குருந்ததாம். அதைச் சுவாமிகள் பார்த்துவிட்டதாம். உடனே மிரண்டுவிட்டது! தன்னுடைய கண்களிலே 'கோபாக்கினி'யைக் கக்கிக், கறுப்புக் கொடியைச் சுட்டெரித்துவிட முயன்றிருக்கும் போலிருக்கிறது; முடியவில்லை. உடனே "இந்தச் சேரியில் நான் கால்வைக்க மாட்டேன். பேசவும் மாட்டேன்" என்று சபதமொழி கூறிக் கர்ஜித்ததாம். "நீங்கள் எல்லோரும் காங்கிரசுக்குத் துரோகம் செய்துவிட்டீர்கள். (பிடியுங்கள் சாபம்!)" என்று கூறி, 'விசுவாமித்திர'ரின் உருவெடுத்து, சேரியை விட்டு வெளியேறிற்றும். அது பக்த கோடிகளுக்கு கலக்கத்தைக் கொடுத்துவிட்டிருக்கிறது! 'தென்னுடைய சகஜாநந்தமே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று மனதில் துதிபாடிக் கொண்டுபோனும், பக்த கோடிகளெல்லாம் ஒன்று திரண்டு, கறுப்புக் கொடி மரத்தை அடியோடு பெயர்த்தெடுத்து, ஊருக்கு அப்பால் கொண்டுபோய் வைத்து, 'ஆகஸ்டு சேவை' செய்தார்களாம். சுவாமிகளின் 'நெற்றிக்கண்' திறக்காதபடியாலே, தீக்குச்சியைக் கொண்டு, 'முன்னையிட்ட தீ முப்புரத்திலே, பின்னையிட்ட தீ நாற்பத்திரண்டு ஆகஸ்டிலே, இப்பொழுதிடும் தீ கறுப்புக்கொடியிலே' என்று சொல்லாமல் சொல்லி, கொடிக்கு நெருப்பு வைத்தார்களாம். கொடி, 'திருநீற்'றின் மயமாக மாறிய பிறகு, சுவாமிகளிடம் ஓடோடி வந்தார்களாம். வந்து 'நிலம் படிந்தெழுந்து' வணங்கி நின்று, "எல்லோரும் காங்கிரசைத் தவிர, வேறு எந்தக் கட்சியிலும் சேரவில்லை" என்று 'சத்தியம்' செய்தார்களாம். பின்பு சுவாமிகளின் மனம் 'பனிக்கட்டிபோல்' குளிர்ந்து, சேரிக்குள் பவனிவந்து, திருவாய் மலர்ந்தருளிற்றும்!

'சுவாமிகள்' சகஜாநந்தம் நடத்திக் காட்டிய காட்சியை, காங்கிரஸ் ஏடுகளில் ஒன்றாகிய 'தினசரி' வெளியிட்டுள்ளதைக் காணுங்கள். 'தினசரி' மே 26ம் நாள் இதழில் 4ம் பக்கத்தில், 2வது காலத்தில்,

> "சேரியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தச் சேரியில் ஒரு கருப்புக்கொடி பறந்துகொண்டிருந்ததை பார்த்த சுவாமி ஸ்ரீ சகஜாநந்தா இந்தச் சேரியில் நான் கால்வைக்க மாட்டேன், பேசவும் மாட்டேன் என்று கூறிவிட்டு, நீங்கள் எல்லோரும் காங்கிரஸுக்குத் துரோகம் செய்துவிட்டீர்கள் என்று கூறிவிட்டு புறப்பட்டார். உடனே சேரிவாசிகள் கூடி கருப்புக்கோடி மரத்தை அடியோடு பெயர்த்து எடுத்து ஊருக்கு அப்பால் கொண்டுபோய் கொளுத்திவிட்டுத் தலைவர்களிடம் வந்து எல்லோரும் காங்கிரஸை தவிர வேறு எந்த கட்சியிலும் சேரவில்லை யெனச் சத்தியம் செய்தார்கள். பின்னர் எல்லோரும் பேசினார்கள்."

என்று வெளியிடப் பட்டுள்ளது.

சகஜாநந்தம் 'சுவாமிகளோடு' சென்னை சட்டசபையின் சபாநாயகராக விளங்கும் தோழர் சிவசண்முகம் அவர்களும் உடனிருந்து, சேப்பாக்கத்தில் 'வெற்றிக்கொடி' நாட்டிவந்துள்ளார்!

திராவிடர் கழகத்தாரால் சமுதாயத் துறையிலே வீசிடும் கருத்துக்கள் ஒவ்வொன்றும், பாழ்பட்ட கருத்துக்கள் நிறைந்த வைதிக உள்ளங்களுக்கு சவுக்கடி கொடுப்பது போல் இருக்கின்றன. திராவிடர் கழகத்தின் கருத்து வெளிவந்து தாக்கும் போது, வைதிகக் கருத்து கலகலத்து, மிரண்டுவிடுகிறது. ஆகவேதான் திராவிடர் கழகத்தின் முன், தான் வாழமுடியாது என்பதைத் தெரிந்துகொண்ட வைதிகம், மிரளுகிறது; அஞ்சுகிறது; ஓடப் பார்க்கிறது. பிரம்பைக்கண்டு அஞ்சி, அதனை எடுத்து எறியத் தூண்டும் குழந்தையைப் போல, திராவிடர் கழகத்தின் இலட்சிய சின்னமாக விளங்கும் கருங்கொடியைக் கண்டு, வைதிகத்தின் பிரதிநிதியாக விளங்கும் தோழர் சகஜாநந்தம் மிரண்டு, கொடியை அகற்றி விடத் தூண்டுகிறார்.

பிரம்பை எடுத்தெறிந்தாலொழிய உணவு உண்ணமாட்டேன் என்று பிடிவாதம் செய்வதுபோல, 'சுவாமிகளும்' கருப்புக்கொடி இருக்கும் வரையில் அங்கே வரவும்மாட்டேன், பேசவும் மாட்டேன் என்று பிடிவாதம் செய்திருக்கிறது.

பிரம்பை எடுத்தெறிந்து விட்டால், தேவையுள்ளபோது வேறு பிரம்பு வந்துவிடக்கூடும் என்ற சிந்தனையில்லாமலே, பிரம்பு எறியப் பட்டவுடன் குழந்தை மகிழ்கிறது; உணவு உண்ணச் சம்மதிக்கிறது. அதுபோலவே ஒரு கருங்கொடியை அகற்றிவிட்டால், வேறு கருங்கொடி வரக்கூடாதா — முடியாதா—வராமல் தான் இருக்குமா என்ற சிந்தனையில்லாமல், கருங்கொடி அகற்றப்பட்டு எரிக்கப்பட்டவுடன் 'சுவாமிகளும்' மகிழ்கிறது; உள்ளேவர இசைகிறது; பேசவும் சம்மதிக்கிறது.

பிரம்புக்குரியவனான தந்தை, குழந்தையின் செயல்கண்டு, அதன் அறியாப் பண்பு பற்றிப் பரிதாபங்கொண்டு, அவசியமான பொழுது வேறு பிரம்பு தேடிக்கொள்ள முடியும் என்ற முடிவோடு, வேடிக்கைச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருப்பது போல, கறுப்புக்கொடிக் குரிய திராவிடர் கழகத்தாரும், சகஜாநந்தத்தின் செயல்கண்டு, 'சுவாமிகளின்' அறியாமைக்காகப் பரிதாபங்காட்டி, அவசியமான பொழுது வேறோர்

கறுப்புக்கொடியை அச்சேரியில் நாட்டிக்கொள்ள முடியும் என்ற தெளிந்த அறிவோடு, கேலிச்சிரிப்பு சிரித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

குழந்தைக்காகத் தந்தையோடு சேரமாட்டேன் என்று சொல்லிக், குழந்தையைச் சமாதானப்படுத்தும் தாய், உண்மையில் பிறகு தந்தையோடு பேசாமல் இருப்பதில்லை; பேசத்தான் செய்வாள்; ஆனால் குழந்தை நம்புகிறது, அறியாமையின் காரணமாக, தாய் தந்தையோடு பேசமாட்டாளென்று. அதுபோலவே தாங்கள் எந்தக் கட்சியிலும் சேருவதில்லை என்று சேரி மக்களிலே சிலர் கூறியதை வைத்துக் கொண்டு, சகஜாநந்தமும் நம்பக்கூடும்; ஆனால் சேரி வாழ் மக்கள் உண்மையை உணரும்போது திராவிடர் கழகப் பாசறைக்கு வந்துதான் தீருவார்கள் என்பதுமட்டும் உறுதி. ஒரு கறுப்புக்கொடி மரம் சேரியில் நாட்டப்பட்டிருந்தது என்பது, அங்கு சிலர் தங்களைத் திராவிடர் கழகப் பாசறை வீரர்களாக ஏற்கனவே பதிவுசெய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தானே காட்டுகிறது.

'சுவாமிகள்' சகஜாநந்தமும், அவர் தொண்டர் சிவசண்முகமும் பெருமைப்படும்படி, அவர்களின் 'பக்த கோடிகள்' மூட்டிய தீ, கறுப்புக் கொடியைத்தான் தீய்த்திருக்க முடியுமே யொழிய, திராவிடர் கழகத் தோழர்களின் உள்ளத்திலே புகுந்துள்ள கருத்துக்களைத் தீய்த்திருக்க முடியாதே! ஆனால் அந்தத் தீயிலெழுந்த ஒளி கழகத்தவரின் கருத்துக்களை இன்னும் ஒளியுடன் திகழத்தான் செய்திருக்கும்; அதே சமயத்தில் சகஜாநந்தங்கள் சிவசண்முகங்களின் உள்ளத்திலே பதுங்கிக் கிடக்கும் வஞ்சகக் கோழை எண்ணங்களையும் வெளிக்காட்டியிருக்கும். இது ஒரு வகையில், அவர்களை நாடு அறிந்து கொள்வதற்கான நல்லதோர் வாய்ப்புத்தான்!

கறுப்புக்கொடி எரிக்கப்பட்டது என்பதைக்கண்டு சகஜாநந்தம் களிபூத்திருக்கக்கூடும்; அதனைக் கேட்டு காங்கிரஸ் ஏடுகள் உறுதியானசெயல் என்று போற்றவுங்கூடும்; ஏனைய "பக்தகோடிகள்" மகிழ்ச்சியுறவுங் கூடும். ஆனால், அதேநேரத்தில்,காங்தியார், அவர்களுக்குப் போதித்த அஹிம்சைக் கொள்கையையும் சேர்த்து எரித்துவிட்டார்கள் என்பதையும் நினைவுபடுத்திக்கொள்ளும்படியாகத்தான், அந்த நிகழ்ச்சியைக் காங்கிரஸ்காரர்களுக்குக் காணிக்கையாக வைப்பதன்மூலம் அறிவுறுத்துகிறோம்.

சிந்தனையும், தெளிவும் பெறுவதற்கு நேரமில்லாமல், வெறும் கட்சி மாச்சிரியத்தின்பேரில் ஏற்படும்பூசல்களின்போது, இத்தகைய செயல்கள் சாதாரண-மிகத்தாழ்ந்த தொண்டர்களிடையே 'காணப்படுவது இயற்கை என்று வைத்துக்கொண்டாலும், ஓரளவுக்கு அங்கே மன்னிப்புவழங்கவும் இடமிருக்கிறது. ஆனால், காங்கிரசின் தென்னாட்டுத்தலைவர்களிலே ஒருவர் என்று அவர்களாலேயே போற்றப்படுபவர் — சட்டமன்றத்திலே அங்கம் பெறுபவர் — தாழ்த்தப்பட்டோருக்குப் 'பிரதிநிதியாக' விளங்குபவர்—மடாதிபதி-ஆகியதன்மைகள் கொண்ட சகஜாநந்தமும், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக இருப்பவர் — வழக்கறிஞர் — சட்டமன்றத்தின் சபாநாயகர், ஆகிய தன்மைகளைக்கொண்ட சிவசண்முகமும், ஒருகட்சியின் கொடியை எரிக்கப்பார்த்திருந்திருக்கிறார்கள் — இசைவு தந்திருக்கிறார்கள்—பாராட்டியிருக்கிறார்கள் — மகிழ்ந்திருக்கிறார்கள். இதற்குப் பெயர் அரசியல் நேர்மையா?

கொள்கையோடு கொள்கையை; விருப்பமிருந்தால், மோதவிட்டுப் பார்ப்பதுதான் அறிவுடைமையும், ஆண்மையுடைமையும் ஆகும். அஃதன்றி, கொள்கையின்மீது – அதன் சின்னமாக நிற்கும் கொடியின்மீது அதிகாரப்பலத்தையும், ஆள்பலத்தையும், பணபலத்தையும் ஏவிவிட்டு மகிழ்ந்திறுமாந்திருப்பதற்குப்பெயர் நீதியுமாகாது — நேர்மையுமாகாது— வீரமுமாகாது. கொள்கையில் ஏற்பட்ட கோழைத்தனம் என்றே கூறுவர் அறிவுடையோர், இதுபோன்ற செயலை

கறுப்புக்கொடி! பிறப்பினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பேதங்களைப் போக்கடித்துப், பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கிக்காட்ட நிற்கும் ஒருபெருஞ்சின்னம்; சமுதாயத்தின் அடியில் வீழ்த்தப்பட்டு நசுக்கப் பட்டுக்கிடக்கும் மக்கள், மீட்சி பெற்று, உயர்ச்சியடைய ஏதுவாக இருக்கும் ஊன்றுகோல்!

ஏகாதிபத்ய வெறிபிடித்த வெள்ளையர் ஆட்சியில்கூட, ஒரு கட்சியின் கொடி இவ்விதமாக அகற்றப் பட்டுத் தீக்கிரையாக்கப்படவில்லை. யூனியன் கொடி ஆட்சிக் கொடியாக இருந்த காலத்தில், ஆட்சிப் பலமற்ற இதர கட்சிக் கொடிகள், அந்தந்தக் கொடிகளுக்கிருந்த பெரும்பான்மை ஆதரவைப் பொறுத்து, ஆங்காங்கு பறந்து கொண்டுதான் இருந்தன. வெள்ளையராட்சிக் காலத்தில், பெரும்பான்மைக் காங்கிரஸ் செல்வாக்கால் உறுப்பினர்களின் தொகையை அதிகப்படுத்திக் கொண்ட நகர சபைகளிலும், ஜில்லா போர்டுகளிலும் காங்கிரஸ் கொடி பறந்துகொண்டுதான் இருந்தது. அதை யாரும் அகற்றவும் இல்லை— தீக்கிரையாக்கவும் இல்லை—அலட்சியப்படுத்தவும் இல்லை. ஒரு கட்சியின் கொடியை அவமதிக்கும் அற்ப அறிவுள்ளவர்களாகவும் அவர்கள் இருந்ததில்லை. ஒரு கொடி என்றால், அக்கொடி, அக்கட்சிக் குரியவர்களின் உயிர் போன்றதென்பதை அறியாத அசையாப் பொருளின் அறிவைப் படைத்தவரன்றி மற்றெவரும் ஒரு கட்சியின் கொடிக்கு ஊறுதேடமாட்டார்கள். ஒரு மரத்துக்கு இருக்கும் அறிவுகூட நம் நாட்டிலுள்ள 'மடாதிபதிகள்' பெரும்பாலாருக்கு இல்லாத காரணத்தால் தான், பிற மங்கையரின் மடியைப் பிடித்திழுத்து மன்றமேறித் தீர்ப்புப் பெறும் நிலை வந்திருக்கிறது!

இந்த நிலை, சைவ—வைணவ மடங்களில் இருக்கும் மடாதிபதிகளுக்கு மட்டும் ஏற்படுவதில்லை. பொதுவாகவே மதத்தின் பேரால் மடாதிபதிகளாக இருக்கும் சிலருக்கு ஏற்படும் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. அண்மையில் ஒரு கிருத்தவப் பாதிரியார் பதினைந்து வயதுள்ள வில்லியம் என்ற பையனைத் தன்னுடைய 'துர்நடத்தைக்கு' ஆளாக்கியதாகவும், அதன் காரணமாக ஜோசப் என்ற அந்தப் பாதிரிக்குத் திண்டுக்கல் நீதிபதி எட்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்ததாகவும் ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்துள்ளது. தர்மபுர மடத்துத் தம்பிரான் வைரத்தம்மாள் என்ற மங்கையை 'வம்பு' செய்தார் என்ற ஒரு வழக்கும் இதுசமயம்

நடைபெற்று வருகின்றது. இல்லறத்தை வெறுத்து, இந்திரியச் சேஷ்டைகளை அடக்கி, ஆண்டவனுலகுக்கு அடியவர்களை அழைத்துச் செல்லுவதாகச் சொல்லிக்கொள்ளும் இத்தகைய ஆஷாடபூதிகளான மடாதிபதிகளில் ஒரு சிலர், பரலோக வாழ்வுக்கு வழி அமைப்பதோடு, இகலோக வாழ்வுக்கும் இனியவை பல செய்வதாக இயம்பித் திரிகின்றனர்!

இன்னுமொரு சிலர், தங்களை மடாதிபதிகள் என்றும் சொல்லிக்கொண்டு அரசியலிலும் புகுந்து அழிவு வேலையில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாத காரணத்தால், நாம் மேலே குறிப்பிட்டபடி சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்ளுகின்றனர். "அப்பா கையில் இருக்கும் பிரம்பைத் தூர எறியும்படி செய்தால் தான் நான் சோறு சாப்பிடுவேன்" என்று கூறும் குழந்தையைப்போல், "அதோ தெரியும் கறுப்புக் கொடியை அப்புறப்படுத்தினால் தான் நான் அந்த ஊருக்குள் நுழைவேன்" என்று சுவாமி சகஜானந்தம் கூறுகிறதென்றால், அதற்கு அரசியல் அறிவு அணுவளவாவது இருக்கிறதென்று கூறமுடியுமா என்று கேட்கிறோம்.

ஒரு கட்சியின் கொடியை, அது இருக்குமிடத்தினின்றும் அகற்றுவதென்றால், அக்கொடியின் கீழ்உள்ள கட்சி, எதிர்க் கட்சியால் முறியடிக்கப்பட்டு, அக்கட்சியின் பெயரைச் சொல்லவே ஒரு ஆள்கூட இல்லை—நாட்டிலுள்ள அனைவரும் அக்கட்சியை விட்டு விலகி எதிர்க் கட்சியோடு சேர்ந்துவிட்டனர் — இனி அந்தக் கொடிக்கே வேலை இல்லை என்ற நிலை சட்டபூர்வமாக ஏற்பட்ட பின்னர்தான் அக்கொடியை அகற்றுவதும், அப்பொழுதும் அதனைத் தீக்கிரையாக்கும் தீய செயலைச் செய்யாமல், அந்த இடத்தில் வேறொரு கொடியை ஏற்றுவதும் இயல்பாக நடக்கும் , சம்பவமாகும். ஆனால், ஒரு கொடியும், அதைச் சின்னமாகக் கொண்ட ஒரு கட்சியும், அக்கட்சியை ஆதரிக்கும் மக்களும் பெருவாரியாக இருக்கும்போது, அதிகார பலம் தூண்ட—ஆணவம் துணை செய்ய—அறியாமை தூபமிட அக்கொடியை அகற்ற முற்படும் அழிவு வேலையைச் செய்யச் சாதாரண அறிவுகூட இல்லாதவர்கள் முனைவார்களேயன்றிச், சிறிதளவு அறிவுக் கூர்மையுள்ளவர்களும் இதனைச் சிந்தனையாலேகூட நினைக்கவும் மாட்டார்கள்.

நம்முடைய அன்பிற்குரிய சுவாமி சகஜானந்தம் அவர்கள் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒருவர். காந்திய அகராதிப்படி 'ஹரிஜன்' என்ற பட்டத்தைப் பெற்றவர். திராவிடப் பழங்குடி மக்களில் ஒருவரான சுவாமி சகஜானந்தம் அவர்கள், திராவிடமக்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் இழிவைக் குறிப்பதும், அந்த இழிவு போக்கப்பட வேண்டுமென்பதன் அறிகுறியாக விளங்குவதுமான கருப்புக் கொடியைக் கண்ணாலும் பார்க்கமாட்டேன் என்று கூறுகிறார் என்றால், அவருடைய அறிவுக் கண் எந்த அளவுக்கு மறைக்கப்பட்டு விட்டதென்பது நன்கு புலனாகின்றது.

சுவாமி சகஜானந்தம் அவர்கள் காங்கிரசில் சேர்ந்து கதருடைக்குள் மறைந்திருந்தாலும், அவர் இன்னும் தீண்டப்படாதவர் பட்டியில் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் மட்டும் என்ன! அவருடைய இனம் முழுவதுமே இன்னும் தீண்டப்படாதவர் பட்டியில்தான்—'ஹரிஜன்' என்ற பட்டத்தோடு இருக்கின்றது. தீண்டாமையைச் சட்டபூர்வமாக ஒழிப்பதென்ற முடிவைச் சர்க்கார் செய்த பின்னரும், 'ஹரிஜன்' தீண்டப்படாதவன் என்ற சொற்கள் நடைமுறையில் இருக்கத்தான் செய்கின்றன. தீண்டாமையை ஒழிப்பதற்காகச் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே, அத் தீண்டாமையை• நிலைநாட்டும் ஹரிஜன், தீண்டப்படாதவன், என்பன போன்ற இழிசொற்களை யாரும் பயன்படுத்தக் கூடாதென்ற விதியையும் சர்க்கார் உண்டாக்கியிருக்கவேண்டும் என்று திராவிடர் கழகம் கூறுகின்றது. ஏட்டில் மட்டும் தீண்டாமை ஒழிப்பு இருக்கிறது—ஆனால் நாட்டில் — நடைமுறையில் தீண்டாமை திண்டு தலையணை போட்டுப்படுத்துக்கொண்டு தான் இருக்கிறது. தீண்டாமையை அகற்ற யாராலும் முடியாது என்ற ஆணவம் நாட்டின் நாலாபக்கங்களிலும் தாண்டவமாடிக் கொண்டுதான் இருக்கிறது.

அண்மையில் பொன்னூரைச் சார்ந்த காசுக்கூர் என்ற இடத்தில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவர்களின் திருமண ஊர்வலமொன்று உயர் சாதிக்காரர்களால் தாக்கப்பட்டதன் விளைவாகத் திருமணத் தம்பதிகள் உட்படப் பதின்மூன்று பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியொன்று பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. உயர் சாதிக்காரர்களால் தாக்கப்பட்ட திருமணத் தம்பதிகள் இருவரும் எம். பி; பி. எஸ்; பாஸ்பண்ணியவர்களாம். என்ற போதிலும் அவர்கள் 'ஹரிஜன்' என்ற பட்டத்துக்குரியவர்களாக இருந்த காரணத்தால் உயர் சாதிக்காரர்களால் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப் பட்டிருக்கின்றனர். ஏட்டில் ஏற்படுத்தியுள்ள சட்டம், நாட்டில் நடைமுறைக்கு வரமுடியவில்லை—முடியாது என்பதைத் தானே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. சுவாமி சகஜாநந்தம் அவர்களுக்கும் இச் செய்தி எட்டியிருக்கும் என்றே நம்புகிறோம். என்ற போதிலும் அவர் இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் செய்திருக்கிறார். அதாவது, மேலே குறிப்பிட்ட திருமணத் தம்பதிகள் உயர் சாதிக்காரர்களால் தாக்கப்பட்ட அதே நாளில் சேப்பாக்கம் கிராமத்துக்குச் சென்று, கருப்புக்கொடியை அகற்றும் திருப்பணியைச் செய்திருக்கிறார். இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், எந்தக் கருப்புக்கொடி நாட்டிலுள்ள இழிவுகளைப் போக்குவதற்குச் சின்னமாக விளங்குகிறதோ — எந்தக் கருப்புக்கொடி நாட்டிலுள்ள தீண்டாமையை ஒழித்து, 'ஆதித்திராவிடர்' என்ற சொற்றொடரில் உள்ள 'ஆதி' என்றசொல்லை எடுத்து, அனைவரையும் திராவிடர்என்றஒரே பட்டியில் சேர்க்கும் சின்னமாக விளங்குகிறதோ — எந்தக் கருப்புக்கொடி உயர் சாதிக்காரர்களின் ஆணவத்தை அடக்கும் சின்னமாக விளங்குகிறதோ — எந்தக் கருப்புக் கொடி ஏழை—பணக்காரன் என்ற வேறுபாட்டை அகற்றும் சின்னமாக விளங்குகிறதோ அதே கொடியைத் தான் அன்பர் சகஜாநந்தம் அவர்

(3-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை

★ ஒரு காலி நாற்காலி ★

இரா. செழியன்

முகுந்தன் ஸ்டுடியோவிற்குள் அன்றிரவு பிரகாசமாய் ஒளி விட்டது. "நாட்டிய ராணி" என்ற படத்தின் முக்கியகட்டம் அன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பளிங்கினால் அமைக்கப்பட்ட சித்திர மண்டபம், அதன் நடுவில் பனிநீரைச் சிந்திடும் நீரூற்று, சுற்றிலும் தாமரை மலர் போன்ற நடன மேடைகள். வேலைப்பாடுகளுக்குக் கடைசிமெருகு ஏற்றப்பட்டு, காட்சியைச்'சுடுவதற்கு'(Shooting)காமிரா தயாராக இருந்தது. "இந்தக் காட்சி அப்படியே அமைந்துவிட்டால், அற்புதம்! அபாரம்! இந்தப் படத்தைத் தட்டிக்கொள்ள வேறெதுவும் கிடையாது. அப்புறம் கமல குமாரிக்கே வேறு இடத்தில் நடிக்கமனம் வராது" என்று டைரக்டர் பஞ்சனதம் படமுதலாளி முத்து அண்ணாமலையிடம் புகழ்ந்தார். "கதைப் போக்கில் இந்தக்காட்சிதான் முக்கியமானது. நாட்டியராணி! நாட்டியம், ராணி இரண்டு சொற்களையும் ஒரே கட்டத்தில் சித்தரித்திருக்கிறேன்" என்றார் கதாசிரியர் கந்தப்பன். சொற்களைச் சேர்த்துவிடுவது சுலபம். ஆனால் நடனக்கலையை ராணிவேடந்தாங்கிய கமலகுமாரியிடம் அழைத்துவருவதில் இருந்த கடினம் டைரக்டருக்குத்தான் தெரியும்.

பஞ்சனதம் கைக்கெடியாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்றுக்கு மேலாகியது. "ஒன்பதுக்கு என்று சொல்லியிருந்தோம். மணி பதினொன்று ஆகிவிட்டது. இன்னும் வரவில்லையே" என்றார் முதலாளி முத்துவிடம். "கமலா இதோவந்துவிடும்" என்று முத்து சமாதானம் சொன்னார். கமல குமாரி வீட்டுக்கு டெலிபோன் செய்தார்கள். அவள் வீட்டிலில்லை. "எங்கேயாவது சுற்றிக்கொண்டிருப்பாள். நான்போய் அழைத்து வருகிறேன்." என்று முத்து காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார். செட்டிங் விளக்கை அடக்கிவிட்டு டைரக்டர் உட்கார்ந்தார். பக்கத்திலிருந்த பெஞ்சில் கதாசிரியர் படுத்தார், தன் கதையிலுள்ள சிக்கல்களை நினைத்துக் கொண்டதும் அவருக்குத் தூக்கம் வந்துவிட்டது.

சில்லரை நடிகைகள் ஆங்காங்கு உட்கார்ந்து, பேசிக்கொண்டிருந்தனர். தோட்டத்தின் மூலையிலிருந்த மரக்கிளையில் மின்சார விளக்கு எரிந்தது. அதைச் சுற்றிலும் கொசுக்கள்வட்டமிட்டுக்கொண்டிருந்தன. விளக்கு வெளிச்சத்தில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் வேடமணிந்து நான்குமணி நேரத்துக்கு மேலிருக்கும். வியர்வை வழிந்து முகத்தில் பூசப்பட்டிருந்த பவுடர் கலைந்திருந்தது. சோர்வுற்றிருந்த அவள் முகத்தை உற்று நோக்கினால், அவளுடைய அழகு இன்னும் அழியவில்லை என்பது தெரியும்.

அவள் உட்கார்ந்திருந்த பக்கம் சுந்தரம்பிள்ளை—ஸ்டுடியோ சொந்தக்காரரின் மானேஜர் — வந்தார். "சூடாமணி! இன்னும்கூத்து ஆரம்பமாகவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே எதிரிலிருந்த கல்லின் மேல் உட்கார்ந்தார்.

"கமலகுமாரி இன்னும் வரவில்லை" வெகுநேரம் காத்திருந்ததின் சலிப்பு அவள்குரலில் ஒலித்தது. "நாங்களெல்லோரும் ஏழுமணிக்கே வந்துவிட்டோம். ஒன்பது மணிக்கு ஆரம்பம் என்று டைரக்டர் சொன்னார். மணி பதினொன்றுக்கு மேலாகிவிட்டது."

"டைரக்டரிடம் போய்க் கடிகாரத்தைக் காண்பிப்பதுதானே!" என்று சுந்தரம் கேலியாகச் சொன்னார். கமலகுமாரிஎன்றால் முதலாளிடைரக்டர் எல்லோருக்கும் பயம் என்பது அவளுக்குத் தெரியும்.

"ஏன்? இரண்டொரு வேஷங்களும் கிடைக்கிறதே என்று பார்க்கிறீர்களா? வேறு வழியில்லை, சுற்றிச் சுற்றி இங்குதான் வந்தாகவேண்டுமென்று உங்களுக்கெல்லாம் கேலியாய் இருக்கு!"

"நீ எங்கிருந்துவருகிறாய்? இதற்கு முன் எந்தெந்தப் படங்களில் நடித்தாய்?" என்று சுந்தரம் பிள்ளை கேட்டார்.

"எங்கிருந்து வந்தால் என்ன!" என்று சூடாமணி கோபத்துடன் பதிலளித்தாள்.

"உன்னுடைய சொந்தவூர் எது? தாய்தந்தையர் இருக்கிறார்களா?" என்று சுந்தரம்பிள்ளை மீண்டும் கேட்டார். அவர் குரலிலிருந்தகனிவு சூடாமணியின் கோபத்தை மாற்றியது; அவள் முகத்தில் சோகம் படர்ந்தது.

சிதறிக்கிடக்கும் சிறு பாகங்களுக்காக அலையும் சில்லரைநடிகை. அவளுடைய வாழ்வும் சிதறித்தானே கிடக்கும்.

"என்னுடைய சொந்த ஊர் தஞ்சாவூருக்குப் பக்கத்திலுள்ள சிறுகிராமம். என்னுடைய தாய்தந்தையர்கள் இருக்கிறார்களோ அல்லது இறந்துவிட்டார்களோ, தெரியாது. பன்னிரண்டு வருஷங்களுக்குமுன்—அப்பொழுது நான் பத்து வயதுச்சிறுமி, தஞ்சாவூரில் ஒருநாடகக் கம்பெனி ஆடிக்கொண்டிருந்தது. பெயர் நன்றாக ஞாபகம் இருக்கிறது, மதுரைபால மதுரகானசபா என்பது. அந்தக்கம்பெனி நாடகங்களுக்கு எங்கள் வீட்டிலும் பக்கத்து வீடுகளிலுள்ளவர்

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.